சேரேதான் பசளையது ரண்டதாகும் சிறப்பான கரும் பசளைசெம்பசளையுமாகும், தூரேதான் கையானுமிரண்டதாகும் துடியான நற்கையான் பொற்கையான்றான், சாரேதான் கிரந்தியது ரண்டதாகும் சாங்கமுடன் சிவகிரந்தை விஷ்ணுதானும், நேரேதான் பாளையது ரண்டதாகும் நெடிதான பங்கனிட பாளைதானே. 846

தானான பாளையது வாதீண்டா தாக்கான சின்னியது பெருஞ்சின்னிதானும், மானான சிறுகின்னிதானுங் கூட்டு மைந்தனே முருங்கையது ரண்டதாகும், வேனான பேய் முருங்கை நல்முருங்கைதானும் வேகமுடன் தான் கூட்டுமெத்த நன்று, பானான கத்தாழை ரண்டதாகும் பாகமுடன் கல்லினிட தாழையாமே. 847

தாழையாம் சோத்தினிட தாழையாகும் தாக்கான கருங்கொள்ளு செங்கொள்ளுமாகும், வாழையாம் பேய் வாழை யப்பாவாகுடனே கருணையது ரண்டதாகும், மோழையாம் நல்கருணை பொற்கருணையாகும் மூதண்ட நெல்லியது ரண்டதாகும், காழையாம் நெல்லியரு நெல்லியாகும், கடிதானகரும்பதுவு மிரண்டதாமே. 848

ரண்டுடனே வெண்கரும்பு செங்கரும்பு தானும் நிலையானவகையது ரண்டதாகும், திண்டான பெருவாகை சிறுவாகையப்பா திறமான நொச்சியது ரண்டதாகும், பண்டான கருநொச்சி வெண்ணொச்சி தானும்பாகமுடன்றான் சேர்க்கமெத்த நன்று கொண்டலுடன் நாவலது ரண் தாகும் கொடிதான கருநாவல் வெண்ணாவல்தானே. 849

தானான நங்கையது ரண்டதாகும் தாக்கான பொரியானின் சிறியான்றானும், வேனான விளாவதுவுமிரண்டதாகும் வேகமுடன் குட்டி விளா பெருவிளாயுமாகும், கோனானவவரையது ரண்டதாகும் கொடிதானநல்லவரை கோழியவரைதானும், பானானகடுக்காயு மிரண்டாகும் பாங்கான பொற்கடுக்காய் நற்கடுக்காய் காணே. 850

காணவே வாவர்ரரண்டதாகும் கருவாள பொன்னினாவாவாரையாகும், தோணவே நல்லவாவாரையாகும் தோராமல் கூட்டுவது மெத்தநன்று, சாணவே மணக்கு ரண்டதாகும் சாங்கமுடன்சிற்றினா மணக்குதானும், வேணவே பெரியவாமணக்குமாகும் மேதினியில் கண்டறிந்து கூட்டுவாயே. 851



கூட்டுவாய் வகைவகைக்கு சேரொன்றாக குறிப்பாகயினங்கண்டு சேர்வைகண்டு, மாட்டுவய் வித்தினுட பாகங்கண்டு மதிப்புடனே மூலியுட பதமுங்கண்டு, நீட்டு வாய்பட்டையுட அளவுங்கண்டு நேர்யுடனே சரக்கெல்லாம் ஒன்றாய்க்கூட்டி, வாட்டமுடன் தானிடிப்பாய் சரக்கையெல்லாம் வாகுடனே தான்போட வளமைகேளே.

கேளேநீ பாண்டமதி லிட்டுமைந்தா கிருபையுடன் பேரீச்சங்காய்தானப்பா, மாளேநீ கொடிமுந்திரி பழமுந் தானும் மார்க்கமுடன் வகைக்குஒரு சேரதாக, வாளேதான் மலைத்தேனுங் கூடச்சேர்த்து வளமுடனே கற்கண்டு சரியாய்ச்சேர்த்து, பாளேதான் போகாமல் ரவியில்வைத்து பாகமுடன் சீசாவில் பதனம்பண்ணே. 854

பண்ணவே காயாதிகற்பவுண்டை பாருலகில் நாதாக்கள்ரிஷிகள் தாமும், வண்ணமுடன் மாணாக்கள் பிழைக்கவென்று வாகுடனே சீனபதிதேசத்தாற்கு, திண்ணமுடன் யிப்பாகஞ் செய்துவைத்தேன் திறமையுடன் காயாதி கற்பந்தன்னை, நண்ணமுடன் வுண்டுமல்லோ மார்தாமும் நானிலத்தில் சித்திரைப்போலிருந்திட்டாரே. 855

இருந்திட்டார் வெகுகோடி காலமப்பா யெழிலான சித்தர்முனி தம்மைப்போல, குருந்திட்ட சமாதிதனி லிருந்துகொண்டு குருவான போகரைத்தான் மனதிலெண்ணி, திருந்திட்ட சிவயோகந் தன்னில்நின்று தீரமுடன் காயத்தை நிறுத்திக்கொண்டு, பொருந்திட்டமாகவல்லோ வாசிதன்னையூட்டியே வுள்ளடக்கி புரிந்திட்டாரே. 856

புரிந்திட்ட காயமது மூச்சடங்கி பொங்கமுடன்வெகுகோடி காலந்தானும், பரிந்திட்டமாகவல்லோ சமாதிதன்னில் பரிதிமதி காணாமல் யிருந்தாரப்பா, சரிந்திட்டமாகவல்லோ சரிகைதன்னை சாக்கிரதை சுழுத்தியுடன் கிரியையோடு, துரிந்திட்ட துரியாதி தாமும்பூண்டு துப்புரவாய் மண்மறைவில் யிருந்தார்தாமே. 857

தாமான காயாதி யுண்டைதன்னை தற்காலம் மானிடர்கள் கொள்வாரானால், பூமான்கள் வெகுகோடி காலமப்பா பூவுலகில்தானிருப்போர் வயதோமெத்த, சீமான்கள் காயாதியுண்டிட்டாலும் சீர்பெறவே மாய்கைதனை யொழிக்கவேண்டும், நாமானவாயுரு வேதந்தன்னை நாட்டினேன் மாணாக்கள் பிழைககத்தானே. 858

தானானகற்பமது உண்ணும்போது தகைமையுடன் புளிபுகையுந்தள்ளவேண்டும், வேனானகற்பமதுகொண்ட போது வேகமுடன் வாசியது கீழ்நோக்காகும், கோனான மண்டலந்தான் கொண்டாயானால் கொடுங்காசை மீளை யது தொண்ணூற்றாறும், மானான வாதமென்றதென்ப துமபோம் மதிப்புடனே பித்தம் நாற்பதுவும்போமே.

போகேதான் மேகமது யிருபத்தொன்று பொலிவான கிரந்தியதுபதினெட்டும்போம், வேமேதான் சூலைபதினெட் டும்போகும் விருப்பமுடன் குன்மமென்ற தெட்டும்போ கும், நாமேதான் சொன்னபடி பாண்டாறும்போம் நாடா துவிஷவலியும் நவிலொண்ணாது, சாமேதான் சன்னிபதி மூன்றும் போகும் சார்பானகக்கலுடன் வாந்திபோமே.

வாந்தியாம் விக்கலுடன் வரோசிகப்போம் வகுத்த தொருபீனசமுமெட்டும் போகும், காந்தலெனும் தேகமது குளிர்ச்சிகாணும் கண்கூச்சம் பெருமூச்சு காணாதோடும், பாந்தலெனும் பாண மது போலாம் நோய்கள் பறக்கு மடா தேகமதிற்சன்னலாகி, சாந்தமுடனென்னாளும் தளிர்ச்சிகானும் சதாகாலமெந்நாளும் கற்றூணாமே. 861

கல்லான தூணுக்கு யிணைவேறுண்டோ காசினியிற் சித்தனைப் போல் நீயுமாவாய், வல்லானசித்தர்முனி ரிஷி யென்பார்கள் வையகத்திலுனைக் கண்டோர் நடுங்குவார் கள், புல்லான மானிடனாயிருந்திட்டாலும் பூதலத்தி லுன்னையொரு நாதென்பார், வெல்லான ரிஷியென்று நடுங்குவார்கள் வேதாந்தாயருள்தான் வேண்டும்பாரே.

பாரேதான் பராபரியாளருளும் வேண்டும் பாருலகில் ரு[illegible]ங்கர்முனி கடாட்சம் வேண்டும், சீரேதான் விட்டகுறை தா[illegible]வே[illegible]டும் சிறப்பான தொட்டகுறை நேரவேண்டும், [illegible]ன் லலாட்ட கருவிருக்க வேண்டும் நேர்புடனே [illegible]ல்லாம் கூடினாக்கால், கூரேதான் நினைத்ததெல் லாரு சித்தியாகும் கொற்றவனே நீயுமொரு சித்தனாமே.

**போகர் சத்தசாகரங்கண்டது**

ஆமேதான் யின்னமொரு கருமானங்கேள் யப்பனே யான்கண்ட வரைதான்கேளு, போனேனே சத்தசாகரமுங் கண்டேன் பொங்கமுடனேழுவகை தோற்றங்கண்டேன், நானேதான் அஷ்டவகை தீவுகண்டேன் நாட்டமுடனஷ்ட பாலகரைக் கண்டேன், கோனேதான் எனதையர் காலாங் கிநாதர் குருபதத்தை வணங்கியல்லோ போனேன்பாரே.

**வெள்ளையானைமீதில் தேவேந்திரனைக் கண்டது**

பாரேதான் குளிகையொன்று பூண்டுகொண்டு பட்ச முடன் தீவுகளிற் செல்லும்போது, நேரேதான் வெள்ளை யானைமீதிலேறி நேர்புடனே இந்திரனும் போகக் கண்



[illegible], தேறேதான் யடியேனும் சிறுபாலன்றான் சீக்கிர மாய் அடியேனும் பின்றொடர்ந்தான், நீரேதான் தேவேந் திர பகவான்தானும் நிர்த்தமுடன் என்றனையும் யாரென் றாரே. 865

யாரென்று கேழ்க்கையிலே யடியேன்றானும் அப் பனே கால்நடுங்கி மெய்நடுங்கியேதான், சீருடனே சீஷ னென்ற சிறப்புடனே யானுமல்லோ பக்கல்சென்றேன், மார்புகழும் தேவேந்திரனென்னைப் பார்த்து பாலகனே சிறுவயதுள்ள பாலா, நேருடனேயென்முன்னே பயமில் லாமல் நேர்மையுடன் வந்ததினால் சாபந்தானே. 866

தானான சாபமது சொல்லும்போது தன்மையுடன் குளிகைபூண்டு வந்தேன் சாமி, கோனான யெனதையர் காலாங்கிநாதர் குருபதத்தை வணங்கி நித்தம் விடையுங் கேட்டு, பானான பராபரியாளுரையுங்கேட்டு பட்சமுடன் சத்தசாகரமுங்காண, நானான போகரிஷி வருகும்போது நளினமுடன் தெரிசனங்கள் கிடைக்கலாச்சே. 867

கிடைத்ததென்று சொல்லுகையிலடியேன்றானும் கீர்த்தியுடன் றானுரைக்கச் சாமியப்போ, படைத்தலைவர் கிங்கிலியராயிரம் பேர்பாங்குடனே யிந்திரனை சூழ்ந்தி ருக்க, உடைபூண்ட பெண்களுடன் கோடாகோடி வுத் தமரை சூழ்ந்து கொண்டுதாமிருந்தார், நடைநொடிரம்பை யுடன்மெல்லிதானும், நாட்டியமா மேனகை யுமிருந்த தாமே. 868

தாமுடனே திலோத்தமையுமூவர்சியுந்தானும் தகமை யுடன் கொலுக்கூடமங்கிருந்தார், நேமமுடன் தபோத னர்கள் கோடானகோடி நேர்மையுடன் கைலாசகிரியில் தானும், வாமமுடன் தவசிறுப்பாரிலக்கோயில்லே, வாகு டனேரிஷிகூட்ட மனேகந்தானும், சேமமுடனிந்திரனோ டிருக்கக்கண்டேன் சேனவதிசயங்களெல்லாந்தெளிந்திட் டேனே. 869

தெளியவேயடியேனும் காத்திருந்தேன் தேவேந்திர பகவானுமெந்தனுக்கு, எளியனுமெந்தனுக்கு கிருபை வைத்து எந்தனதுபதி தேடி வந்தகாலே, வெளியாங்க மாகவேதான் சாமிதானும் வேடிக்கை வினோதமெல்லாங் காண்பித்தேதான், ஒளியான சோதியென்னுமா சீர்மத்தில் உத்தமனே யிடதுபக்க மிடதந்தாரே. 870

தக்கவுடனடியேனு மங்கிருந்து சதகோடிசூரிய சிம் மாதனத்தில் சொந்தமுடன் சுகித்திருந்து கேள்விகேட்டு கேள்விக்குத்தார விடையுஞ்சொல்லி, அந்தமுடன் தேவர் களின் பக்கம்போ யந்தரலோகத்து மர்மமெல்லாம், விந் தையுடன் றானறிந்தேன் வினோதமெல்லாம் விருப்பமுடன் றானுரைப்பேன் மகிமைகேளே. 871

## போகர் அமராபுரி கண்டது

கேளப்பா வமராபுரி சென்றேன்யானும் கொடியான
கோட்டை முதலுளவுகண்டேன், தாளப்பா தங்கமதில்
கோட்டையப்பா தாக்கானமாளிகையுங் கோபுரந்தான்,
வானப்பா வீதிகளின் தேர்களப்பா வகுப்பான
சோலைமுதல் தோப்புமுண்டு, நீளப்பா மல்லிகைப்பூ சாலை 872
யுண்டு நீடாழிகோட்டைக்கு வலங்கமுண்டே.

உண்டான வசுவங்கள் கூட்டமுண்டு உத்தமனே
வெள்ளானைக் கூட்டமுண்டு, திட்டான கோட்டைக்குள்
ளனேகமாதர் சிறப்புடனே நாட்டியங்கள் செய்துநிற்பார்
பண்டான கனிவகைக ளனேகமுண்டு பாங்கானதேவதா
கனியென்பார்கள், வண்டான கூட்டங்கள் கீதம்பாடும் 873
மகத்தான தொனியோசை யனேகம்பாரே.

பாரேதான் நவரத்தின மலையுமுண்டு, பாலகனே
வெகுகோடி ரிஷிகள்கண்டேன், மேரேதான் மேருவுமிதற்
கீடல்ல மெத்தவுண்டு வதிசயங்கள் சொல்லப்போமோ,
நேராதான் வாக்கினையின் பக்கல்சென்றேன் நெடிதான
வடக்குபுர கொண்டுசென்றார், சீரேதானுக்கினைகள்மெத்த
வுண்டு சிறப்புடனே கண்டுமல்லோ திடுக்கிட்டேனே.

திடுக்கிட்டுப் பார்த்தளவில் கிங்கிலியரப்பாசிறள்
கூட்டமாயிரம்பேரோடிவந்து, ஒருக்கமுடன் தூதுவர்க
ளாயிரம்பேர் வுத்தமர்களானவர்க ளொன்றாய்க்கூடி,
நடுக்கமுடன்நரகமதி லிழுத்துக்கொண்டு நாட்டமுடன்
றள்ளுகின்ற வளமைகண்டேன், ஒடுக்கமுடன் மாந்தர்
களை தான்குறித்து வுத்தமரே செய்பாவஞ் சொல்லென் 875
றாரே.

சொல்லென்று கேட்கையிலே தூதர்தாமும் செப்ப
லுற்றாரவர் செய்தபாவந்தன்னை, வெல்லவே பூசைமுக
மிடர்செய்தோர்கள் வேகமுடனுடைமைதனை கொள்ளை
கொண்டோர் புல்லவே மிறுகமென்ற சீவன்தன்னை
பொங்கமுடன் வதைசெய்து கொன்றுபோட்டோர் அல்ல
லுடன் சையோகஞ் செய்தபேரை அகடழித்து நாணம் 876
வரச்செய்தோர் தாமே.

செய்யவேத பசுகட்கு வின்னஞ்செய்தோர் செயலான
பாக்கியத்தைக் கொள்ளைகொண்டோர், மெய்யுடனே
புருஷனுக்கு வுண்மைபேசி மேதினியில் சோரத்துமம்
செய்தபேரும், கைதவமாய்ஞானிகட்குயிடர் செய்தோரும்
காசினியில் நற்பெண்டீர் கொடுத்தபேரும், வெயில்தனிலே
மாடுகட்கு சலங்காட்டாமல் வெட்ட வெளி தன்னிலேதான் 877
விட்டோர்தாமே.

விட்டபெரியோர்களைத் தானகமேபேசி வேதாந்தத்
துண்மையெனும் நாதர்தம்மை, கொட்டுமே பறடுகடித்து



யிடங்கொடாமல் தோருமல்சதாகாலங் துன்பஞ்செய்
தோர், நாட்டமுடன் யகதிபரதேசிதம்மை நேடோறுமைய
மிடாதிட்டபேரும், வட்டமுடன் குழந்தைகட்கு பால்
கொடாமல் வாகுடனே வதைசெய்தோர் பாவியாமே. 878

பாவியாயிருந்து குஷ்டரோகமாகி பாரினிலே வெகு
கோடி பாபஞ்செய்தோர், பூவினிலே வழக்கோரஞ்
சொன்னபாவி பொன்தனையே யபகரித்த பாவியோரும்,
தேவியெனுமம்பாளின் பூசைமார்க்கம் தேடியேமிக்க
கெடுதி செய்தபேரும், நாவினிலே பாஷாணங் தடவி
யல்லோ நாயகனைக் கொன்றதொரு புணியர்க்கே. 879

புண்ணியனும் நியாயஞ் செய்தபேரை பேரின்பவீட
தனை ஜோடித்தோர்கள், துண்ணமுடன் வைகுண்டப்பதி
யிலெல்லாம் திசைகெட்டு முறிபட்டுக்கிடக்கும் வண்ணம்
நண்ணமுட னிதுகளெல்லாங் கண்டேன்யானும் நளின
முடன் வக்கினியின் சுவாலைகண்டேன் தண்ணமுடன்
வட்டையென்ற குழியுங்கண்டேன் தாக்கானவரணை
யென்ற குழிகண்டேனே. 880

கண்டேனே முதலையுட சுளையுங்கண்டேன் காணுறு
வோடைகளில் பானைகண்டேன், தண்டமுள்ள காடுகள்
போலனந்தங் கண்டேன் தன்மையுள்ள தீநரகிற்றள்ளக்
கண்டேன், கொண்டல்வண்ணனச்சுதனை யங்கேகண்
டேன் கோடானகோடி மனுராசர்கண்டேன், தொண்ட
முடன் ரிஷிக்கூட்டங் கோடிசேனை கொற்றவனை சூழ்ந்
திருக்கப் பார்த்திட்டேனே. 881

பார்த்தேனே எமபுரத்துச் சாங்கமெல்லாம் பாழ்நரகு
படுகுழி யாவுங்கண்டேன், தீர்த்தமுடன் லிங்கமது தெரி
சித்தேன்யான் சிறமுடனே கோடிமுனி தபசிகண்டேன்,
சேர்த்துமே வைகுண்டபதியைக் கண்டேன் சேனைதிரள்
கூட்டமதை சேனைகண்டேன், பார்த்துமே வந்தேன்யான்
பரலோகத்தை பராபரியாள் கிருபைதன்னால் பார்த்திட்
டேனே. 882

பார்க்கவென்றால் எந்தனது கணக்குகண்டேன் பாரு
லகில்மூன்றுயுக மிருக்கக்கண்டேன், தீர்த்தமுடன் கணக்
கெல்லாம் பார்த்தாராய்ந்து திறமுடனே கண்டுவந்தேன்
தெளிவதாக, ஏர்க்கவே சத்தலோகத்தின் மார்க்கம் எனைப்
போலக் கண்டவருமொருவருண்டோ, நாற்கமலவட்டத்
தாளாயிபாதம் நான்வணங்கி கண்டறிந்தேனவிலத்
தானே. 883

## வைகுண்டத்தில் பிர்மாவைக் கண்டது

தானான முன்யுகத்தில் பிரமாவுக்கு தாக்கான ஈஸ்பரி
யாள் தந்தசாபம், கோனான எனதையர் காலாங்கிநாதர்

குருசாமி யெந்தனுக்கு சொன்ன துண்டு, தேனுன பிரமா
வும் வைகுண்டத்தில் தேர்வேந்தராசரிட மிருக்கக்கண்
டேன், பானுன ரிஷிக்கூட்டமாயிரம்பேர் பாங்குடனே
பிரமனிடம் கண்டேன்பாரே. 884

கண்டேனே யின்னம்வெகு வதிசயத்தைக் காசினியி
லாருந்தான் கண்டதில்லை, திண்டான வாத்துமகோடி
கூஉிரெண்ணு து வுத்தமனேயவரவர்கள் செய்தபாவம்,
கொண்டானமட்டுக்கும் வாக்கினேயும் குறிப்புடனே
நேமிப்பார் தருமராசன், சண்டாளமானதொரு கர்மி
யோற்கு சதாகாலமாக்கினைகள் நேருந்தானே. 885

நேரவென்றால் புண்ணியர்கள் மெத்தவுண்டு நெடுங்
காலம்தவசிருப்பார் மனுக்கள்கோடி, சேரவே வெகுநாளா
யிருந்துபார்த்தேன் சேனைதிரள் கூட்டங்கள் புண்ணிய
வான்கள், கூரவேமுடியாது சோடாசாரம் சொன்னுலும்
நம்பார்கள் காமிமாண்பர், திறமுடனே வடியேனும் கிட்டு
ருந்து திகழுடனே கண்டேனே போகர்தாமே. 886

தாமான மின்னமொரு கருமானங்கேள் தயவாகச்
சொல்லுகிறேன் தண்மையாக, சாமானமானதொரு வகத்
தியர்தாமும் சாங்கமுடன் வைகுண்டந்தன்னிற்கண்டேன்
கோமானங் கொங்கணவர் செய்தபாவம் குவலயத்தில்
முற்பிறப்பில் மெத்தவுண்டு, பூமானும் கொங்கணரை
கேள்விகேட்டு புத்தியுடன் தண்டனைக் குள்ளாக்கினுரே.

ஆக்கினுர் யிடைக்காட்டார் தன்னைக்கண்டேன் அப்
பனேயவர்செய்த வினைதான்கேளு, பாக்கியங்களனேக
மதாய்க் கொண்டுமென்ன பாருலகில் சிவதருமமில்லை
யப்பா, நோக்கமுடனவர்செய்த பூர்வபுண்ணியம் நொடிக்
குள்ளே ராசனவன் கண்டாருய்ந்து, தாக்கவென்று அவர்
மீதில் பட்சம்வைத்து கஷ்டமில்வாக்கினைக்குள் சென்றிட்
டாரே. 888

சென்றவுடன்சிவபாக்கியர் தன்னைக்கண்டேன் சிறப்
புடனே யவர்தம்மை கேள்விகேட்டார், ஒன்றுமில்லையவர்
மீதில் குற்றமில்லை வுத்தமனே வைகுண்டப்பதியில்தாமும்
குன்றின்மே லிடங்கொடுத்தார் தூதர்தாமும் கொப்
பெனவே சாமிக்குத் தொண்ணுக்கி, வென்றிடவே சதா
காலம் கைலாசத்தில் வேகமுடன்வீற்றிருக்க கேடுண்
டாச்சே. 889

ஆச்சப்பாபிரமமுனி தன்னைக்கண்டேன் அப்பனே
யவர் செய்த கொடுமைகேளும், மூச்சடங்கி பிணம்போல
யிருந்தசித்தன் முடிமீதில் செபம்மாலை யணிந்துகொண்டு
பாச்சலுடன் வெகுதேசம் வோடிச் சென்று பாடுபட்டு
திரவியங்கள் சேகரித்து, மாச்சலுடன் சாத்திரங்கள்



படித்துக்கொண்டு மாருட்டமாகவல்லோ மறைந்தார்
தாமே. 890

மறைத்தபொருளானதினுல் சித்துதம்மை மாற்க
முடன் வைகுண்டந்தன்னிற் சென்று, குறைந்த பொரு
ளுளவுகளை மறைத்ததாலே கோடானகோடி பாவம்நேர்ந்
ததென்று, நிரைத்தனமாய் தன்மனமெண்ணலானுர் நேர்
மையுடன் வைகுண்டபதியின்சேதி, முறைப்படியேசெய்ய
வென்று தூதர்தாமும் முயன்றுமே வாக்கினைகள் செய்
திட்டாரே. 891

செய்யவே கமலமுனி தன்னைக்கண்டேன் சேர்வை
முகம் காணுகையிலடியேன் பக்கல், பையவே தீர்ப்பு
மிகச் செய்யக் கண்டேன் பாழ்நரகில் சிலபேர்களிழுக்கக்
கண்டேன், தொய்யவே காலனவன் கிருபை வைத்து
தும்புரவாய் யெந்நாளும் தர்மஞ்செய்ய மெய்யுடனே
தீர்ப்புரைக்க கண்டேன்யானு மேதினியில் சொன்னுலும்
பொய்யென்பாரே. 892

பொய்யென்பார் பூதலத்தார் சொல்லுவார்கள் பொங்
கமுடன் யான்கண்டவரையிற் சொல்லுவேன், மெய்யு
டனே புலிப்பாணி தன்னைக்கண்டேன் மேதினியிலனேக
மதாய் பாபஞ்செய்தார், கைதவமாயவர் செய்த பாவந்
தன்னை கண்டுமல்லோயெமதர்ம ராஜன் தானும், பையவே
வாக்கினைகள் செய்யக்கண்டேன் பாழ்நரகிலிழுத்துபோ
கக் கண்டேன் தானே. 893

தானுன புண்ணுக்கர் தன்னைக் கண்டேன் தாக்கான
யவர்செய்த கொடுமைமெத்த, தேனுனதையர் காலாங்கி
நாதர் தேர்வேந்தரானவரும் சொன்னதுண்டு, பானுன
புண்ணுக்கர் தன்னையானும் பரமனிடகையிலைதனில் கண்
டேனப்பா, கோனுன புண்ணுக்கர் செய்தபாபம் கோடி
யுண்டிலக்கில்லை யென்பார்காணே. 894

காணவேயவருக்கு வாக்கினைகள் கண்கொள்ளமுடி
யாது வைகுண்டத்தில், தோணவே மாடுகட்டி புண்ணுக்
கீயார் தொடர்வழக்கு மெத்தவதிகாரத்தாரம், வேணவே
வட்டிக்கு வட்டிவாங்கி மேதினியிலிருந்துபல மோசம்
செய்து, நாணவே நாணயங்களதிகஞ் சொல்லி நயமு
டனே வஞ்சகமும் செய்தார்தாமே. 895

செய்ததினுல் எமதர்மராஜனுனோர் சீருலகில் செய்த
தொரு பாபத்தாலே, நையவே வாக்கினைகள் செய்ய
வென்று நாட்டமுடன் விசாரணையில் கொண்டுசென்றுர்,
பையவே குளிகைகொண்டு பக்கல் சென்றேன் பார்த்
தேனே யவருக்கு நடக்குந்தீமை, பொய்யல்ல வுலகுதனில்
சொல்லப்போனுல் பொங்கமுடன் நம்பார்கள் சண்டி
மா[illegible]னபே. 896

சண்டியாமசட்டைமுனி தன்னைக் கண்டேன் தகைமையுடன் யவர்செய்தபாபங்கேளு, அண்டிவந்தசீஷருக்குவபதஞ்சொல்லி அனியாயமாகவல்லோ நூல்மறைத்தார், கண்டிதமாய்ப் பாடல்களை சொன்னாற்போல கருமறைவுகாரணத்தை மறைத்துப் போட்டார், பண்டிதங்களில்லாமற் செய்தாலே பாவம்வந்து நேர்ந்ததென தண்டித்தாரே.

தெண்டமுடன் சட்டமுனிதன்னைக் கண்டுதேர்வேந்தரெமதர்மராசரண்டை, கொண்டுபோய்விட்டார்கள் கோடிதூதர் கொற்றவனுமெமதர்மராசனங்கே, அண்டையிலேதானிருக்கு மடியார் தம்மை அங்ஙனமே சாத்திரத்தைப் பார்க்கச் சொன்னார், தொண்டுசெய்யும் முனிகூட்டம் ரிஷிகள் தாமும் கருதியெனும் சாத்திரத்தைப் பார்த்தார் தாமே. 898

பார்க்கையிலே சாத்திரங்கள் மறைப்பு மெத்தப் பாழாகி மாந்தரெல்லாம் சுட்டுமாண்டார், தீர்க்கமுடன் மறைபொருளை ஒளித்துச் சொல்லி திடங்குலைந்து போவதற்கு திறவுசொல்லி, சேர்க்கவே ஒன்றுவிட்டு முன்பின்னாக செழிப்பானவுட்பொருளை யறியாமற்றான் காக்கவே நூலதனை கண்ணிற்காட்டி கருவாகத்தான்மறைத்தார் சித்தர்தாமே. 899

சித்தராஞ் சாத்திரத்தை மறைத்ததா லேசீருடனேயவர்தனக்கு தீர்ப்புசொன்னார், மெத்தெனவே தீவட்டிகொண்டு தம்மை மேன்மையுடன் நாவதனை சுடவுங்கண்டேன், கத்தனேயான் செய்த தப்பிதத்தை காத்துயென்னை ரட்சிக்கவேண்டுமென்று, சுத்தமுடன் கைகட்டிவாய்புதைத்து சுந்திரனு நின்றிருக்கப் பார்த்தான்தானே.

தானானயிவ்வார்த்தை சாற்றப்போனால் தாரணியில் பொய்யென்று சொல்வார்மாண்பர், சோனான எனதையர் காலாங்கி நாதர் கொற்றவனார் வாசீர்மத்தாலேயானும், தேனான குளிகையது பூண்டுக்கொண்டு தெளிவுடனே பரலோகங்கண்டு வந்தேன், மானானமயேஸ்பரியாள் பாதந்தொட்டு மானிலத்தை கண்டொழித்து வந்திட்டேனே. 901

வந்தேனே வைகுண்டம் யானும் சென்றேன் வாகுடனே சித்தர்களைக்கண்டேன்யானும், அந்தமுடன்தெண்டனைக்கு வாளுமானார் அப்பனே யான்கண்டதனேகமுண்டு, சொந்தமுடன் எந்நாளும் வைகுண்டத்தில் சுந்தரனேயிருக்கமனு தான்கொடுத்து, விந்தையுடன் வாக்கினைகள் நேர்ந்துதங்கே வேகமுடன் காண்பேனே போகர் தாமே. 902



தாமான போகர்முனி சாற்றக்கேளும் சதாகாலம் வைகுண்டந் தன்னில்யானும், வாமானவாக்கினையின் பக்கந்தன்னில் வாகுடனே சுற்றிவரும் போதிலப்பா, நாமான கருவூரார் தன்னைக்கண்டேன் நாயகனார் செய்ததொரு வண்மைகேளு, கோமானுமரசருக்கு வாதஞ்சொல்லி கோடிபொருள் தானிழக்கச் செய்தார் தாமே. 903

## நடராஜர் விக்கிரகம்

செய்ததனாற் பாபம்வந்து நேர்ந்தாலும் செயலான பாக்கியத்தை கெடுத்ததாலும், பையவே பாண்டியர்க்கு மோசஞ்சொல்லி பாங்குடனே தில்லைபதி சென்றாரங்கே, கைதவமாப் பாண்டியனார் தேவஸ்தானம் கட்டினார்வெகு கோடி காலமப்பா, மெய்யுடனே தேவதாஸ் தானந்தன்னில் மேன்மைபெற விக்கிரகஞ் செய்திட்டாரே. 904

செய்திட்ட ரெவர்தன்னால் செய்தாரானால் செயலான கருவூரார்தன்னைக்கொண்டு, மைதிகழுஞ்சித்தர் கருவூரார் தன்னை மன்னவனும் பாண்டியனார் தானழைத்து, வைபுகழும்சித்தரே கேளுமென்று வாகுடனே பாண்டியனார் வாக்களித்தார், பொய்புகலா புண்ணியரே கேளுஞ்சுவாமி பொன்னாலே விக்கிரகஞ் செய்யென்றாரே. 905

என்றையிலே கருவூரார் சொல்லக்கேட்டு எழிலான மன்னவரே தடையென்னோதான், குன்றானமலைத்தங்கம் கோடிமாற்று கொற்றவனே என்னிடமெத்தவுண்டு, பன்றானபாண்டியனார் தாமுறைக்க பாலகனார் கருவூரார்வுட்கொண்டேதான், வன்றான திரவியத்தை வாங்கிக் கொண்டு வளமுடனே கருவூரார் நடந்திட்டாரே. 906

நடந்துமே கருவூரார் பொன்னைவாங்கி நடராசவிக்கிரகஞ் செய்யவென்று, கடந்துமே காவேரி தன்னைத் தாண்டி காவனாரரண்மனையிற் றன்னிற்சென்று, தொடர்ந்துமே நடராசர் கருவமைத்து சொரூபமுள்ளவுட்கருவை வுள்ளமைத்து, படர்ந்துமே மெழுகலோ வுருக்கெடுத்து பாங்குபெற சிலைதனையே வமைத்திட்டாரே.

அமைத்திட்ட கருவதனை வுருக்கொண்டேத்த அப்பனே மண்ணாலே மூசைபண்ணி, சமைந்திடவே கருக்குருவும் வோடிப்பாய சட்டமுடன் தாள்திறந்து பாச்சியங்கேதமைந்திடவே தங்கமதை செம்பதாக்கி தயவுடனேவிக்கிரகஞ் செய்தாரங்கே, துமைந்திடவே தங்கமது செம்புதாக்கி தயவுடனே விக்கிரகஞ் செய்தாரங்கே, துமைந்திடவே தங்கமது செம்புமாக்கி சொரூபமென்ற வுருவமதை மாத்திட்டாரே. 908

மாத்தியே செம்பாலே வுருவமைத்து மன்னவனார் பாண்டியனார் முன்னேவந்து, நேத்தியுள்ளப்ரதமையன்

செய்துவந்தேன் நேர்மையுள்ள பாண்டியனே கண்டு கொள்ளு, பூர்த்தியுடன் மனதுவந்து கருவமைத்து புண்ணியனும் பாண்டியனார் முன்னேவைக்க, தீர்த்தமுடன் பாண்டியனாராசீர்மிக்க திகழுடனே யெதிர்கொண்டு புறப்பட்டாரே. 909

புறப்பட்ட போதையிலே கருவூரார்தாம் பூபாலர் பாண்டியனார் வரவுகண்டு, சிறப்புடனே பாண்டியற்கு யெதிரேசென்று சிற்பரனார் முடிவணங்கி தெண்டனிட்டு திறமுடைய சிலையொன்று நடேசர்தாமும் சீர்பெறவே செய்துவந்தேன் சாமியென்ன, குறமனதாய்பாண்டியனுந் திடுக்கிட்டேங்கி கோபமுடன் சிலைதனையே பார்த்திட்டாரே. 910

பார்க்கையிலே செம்பான சிலையைக்கண்டு பாதகனே பாண்டியனே மோசஞ்செய்தீர், தீர்க்கமுடனுன்கையில் பொன்கொடுத்தேன் திறளான பொன்னையெல்லா மோசஞ்செய்தீர், ஏர்க்கையிலே ஜாதினது புத்திதானே புத்திதானே எழிலான சிற்பரனே வகடுசெய்தீர், சேர்க்கையிலே பொன்னோடே செம்புசேர்த்து சேர்வைதனை கண் மறைக்க மறைத்திட்டீரே. 911

மறைத்திட்ட பொன்னதனை மோசஞ்செய்து மன்னவனே செம்புதனைக் கைகொடுத்து, குறைத்திடவே யென் மனதை புண்ணதாக்கி குவலயத்தில் பெருமோசஞ்செய்த பாவி, வறைத்திடவேகருவூரார் தன்னையங்கே வாகுடனே சிறைச்சாலை காவலுக்குள், முறைப்படியே வதிகாரி கொண்டுசெல்ல மூர்க்கமுடன் கருவூராருரைத்தார்பாரே.

பாரேதான் பாண்டியனார் தம்மைநோக்கி பதலமுடன் வுத்தாரஞ் சொல்வாரங்கே, சீருள்ள பாண்டியனே யின்னங்கேளும் சீறியேயென்மீதில் கனல்தான்கொண்டீர் நேருள்ள பாண்டியரே யின்னங்கேளும் நேர்மையுள்ள விக்கிரகம் பொன்னேயானால், ஊருள்ள குடிபடைகள் மோசஞ்செய்வார் வுத்தமனே செம்மைநிற மாக்கிட்டேனே, 913

ஆக்கினேன் தங்கமதை செம்பதாக்கி அப்பனே யொருவருந்தான் காணாவண்ணம், நோக்கமுடன் மாந்தர் காண்பாரானால் நொடிக்குள்ளே கன்னமிட வெண்ணங் கொள்வார், தாக்கவே தங்கமென்ற செம்பதப்பா தாழ்மையுடன் மோசமது செய்யவில்லை, ஏக்கமின்றி செம்புதனைக் கொண்டுநீரும் யெழிலான கருவுதனை சோதிப்பீரே 914

சோதிக்க பாரமென்ற செம்புதன்னை சுத்தமுடன் தானுருக்கி செப்பக்கேளும், வேதிக்க கருவுதனை செய்வீர் மைந்தா விருப்பமுடன் கடுகளவு தானெடுத்து, நீதியுடன்



வுருக்கு முகந்தன்னிலீய நீடான செம்பதுவும் தங்கமாகும் பாதிமதி மணிபூண்ட பாண்டினாரே பசுந்தங்கம் பத்தரை யுமாற்றுமாமே. 915

மாற்றான பொன்னதுவை கண்டான்ராஜன் மகிமையது தெரியாமல் கோபங்கொண்டார், கூற்றான யெமனென்று எண்ணங்கொண்டு கோலமுடிசிற்பரனே கொல்லச்சொன்னார், நாற்றிசையிலிவர்போலுஞ் சித்தமுண்டோ நடுநடுங்கி கொற்றவனுஞ் சுற்றிவந்து, போற்றி கருவூராரை காணவென்று பூபாலராஜரவர் நினைந்திட்டாரே. 916

நினைத்த பொழுதவ்வளவில் கருவூரார்தாம் நிமைப்பொழுதி லலாடமதில் மையேபூண்டு, சினத்துடனே மறையனின்று மன்னர்தம்மை சீரலுடன் பார்க்குமந்த வேளைதன்னில், சுனைப்படியில் பாண்டியனும் நின்றுகொண்டு சுந்தரனுங் கருவூரார் எங்கேயென்ன, தனைப்புகழும் காவலர்களங்கிருந்து தகமையுள்ள சிற்பரிங்கிலை யென்றாரே.

என்றையிலே பாண்டியனுந் திடுக்கிட்டேங்கி யெழிலான பாகுரை தேடச்சொல்லி, குன்றுமலை கடலோரஞ் சுனையோரந்தான் கொற்றவனுமதிகாரி சொற்படிக்கு, தென்றிசையிற் போதிகவரை துலைதேசந்தான் தொடர்ந்துமே ஆராய்ந்து பார்த்தோமென்ன, வென்றிடவே வந்தவருஞ் சித்தரல்ல வேதாந்தசாமி குருநாதந்தானே. 918

நாதனென்றால் கண்ணுக்கு தெம்படாது நாதாந்த குருவானால் கண்ணிற்றோற்றும், போதமுடன் சித்தான குருவதாமோ பொங்கமுடன் கைலாய பகவான்தானே, நீதமுடன் தேடுவதிலாபமென்ன நீதியுள்ள புண்ணியத்தால் நேர்ந்தால்நேரும், தோதமுட பாண்டியனும் விசனங்கொண்டு துப்புரவாய் மதிகுலைந்து மயங்கினாரே.

மயங்கியே பாண்டியனு மாசீர்மத்தில் மார்க்கமுடன் விசனமதாய் வீற்றிருந்தான், தியங்கியே நடராஜர் தம்மை தானும் தில்லையெனும் பதிதனக்கு சுவாமியாக்கி, தயங்கவே தாரணியிலுள்ள மாந்தர் சட்டமுடன் றான்றெழுது வணங்கிநிற்க, பயங்கரமா யென்னாளும் நாதர்தம்மை பாலித்தார் தேவஸ்தானமாமே. 920

தானமாம் பாண்டியனை யிந்தக்கோலம் தகையுடன் செய்துவைத்தான் சிற்பன்றானும், காண்மையுடன் செய்ததினால் பாபமில்லை கடந்ததொரு சித்தர்களை மோசம் பண்ணி, ஈனமுடன் சாத்திரத்தைப் பிரட்டல்செய்து யேளிதங்களாகவல்லோ பாடிப்போட்டார், ஊனம்வரச் செய்ததினாலிந்தப்பாபம் வுத்தமர்க்கு நேர்ந்ததென நினைத்திட்டேனே. 921

நினைக்கையிலே சிற்பனுக்கு வுப்பாயதண்டம் நேர்ந்
ததுவும் பார்த்திருந்தேன் சுவாமிபக்கல், பனைப்புடனே
கருவூரார் கேள்விசொல்ல பயந்துமே யடியேனுமிகநடுங்கி
வினைப்பயனால் நேர்ந்ததற்கு யென்னசெய்வோம் விதிவ
சத்தைதப்புதற்கு யாராலாகும், தினைப்புடனே, யிச்சங்கை
சொல்லப்போனால் தேசத்தில் பொய்யென்பார் மெய்யென்
னாரே. 922

மெய்யான யின்னமொரு மாற்கம்பாரு மேதினியில்
இராமதேவர் செய்தகூத்து, பொய்யான சாத்திரத்தை
மெய்யதாகப் புகட்டினார் லோகத்து மாத்தற்கப்பா, துய்ய
முடன் சாத்திரத்தைப் பார்த்துப்பார்த்து துறைகெட்டு
முறைகெட்டு துன்பப்பட்டு, பையவே வெகுபேர்கள் சுட்
டலைந்து பாடுபட்டு மாண்டார்கள் கோடிதாமே. 923

கேடியா மிராமதேவர் சாத்திரத்தை குறிப்புடனே
மெய்யென்று விருதாவாக, தேடியே கோர்வைகள்தான்
கிடைக்குமானால் தேசத்தில் சுத்தனாயிருக்கவேண்டி,
நாடியே ராமரென்றும் யாக்கோபாரை நாட்டமுடன்
செய்துவைத்த நூல்கள்பார்க்க, பாடியே பயித்தியங்க
ளதிகமாகிப் பாருலகில் கெட்டலைந்தார் மாண்பர்தாமே.

மாண்பான யாக்கோபு மக்கதேசம் நளினமுடன்
சென்றதொரு வன்மைதன்னை, காண்பான புல்லரிடம்
சென்றுதானும் கருவானவுளவுதனை கண்டாராய்ந்து,
தாண்பான தத்துவத்தில் கடந்தோனென்றும் தகைமை
யுடன் சாத்திரத்தை பெருமைசொல்லி, வீண்பாக மற்ற
தோர் சாத்திரங்கள் வீணாகப்பாடிவைத்தார் வீணதாமே.

வீணான சாத்திரத்தை மாராட்டமாக விருதாவில்
மான்பர்களும் கெட்டுப்போக, காணாத நூல்கள்யெல்லாம்
கண்டோமென்று காசினியில் கடைமுதலும் சார்த்துமே
தான், தோணாமல் வெகுபேர்கள் மாண்டுபோனார் தோற்
றாமலின்னமவர் நூலைத்தேடி, சாணான்றான் கண்ட
பொருள் போலேவாக்கும் சாத்திரத்தி னுண்மைதானே.

உண்மையாம் சாத்திரத்தை மெய்போல்பாடி உத்த
மர்கள் தான்மயங்க திடுக்கிட்டேங்க, நன்மையுடன்
வாதத்தை மெய்போலாக நாதாக்கள் சாத்திரங்கள் பொய்
போலாக, நன்மையுடன் பாடிவைத்தேன் கருவாகத்தான்
காசினியில் யாருந்தான் சொல்லவில்லை, திண்மைபெற
வின்னம் வெகுகோடி கோர்வை கொட்டினே னென்று
சொல்லி கூறினாரே. 927

கூறினார் சாத்திரங்கள் கித்தர்பாலில் குறுக்குமுறை
நெடுக்குமுறை யனந்தங்கோடி, மீறினார் முன்பின்னாப்
பாடிப்போட்டார் மிக்காசாத்திரத்தி னேர்மைதானும்,
தூறினார் குற்றங்கள் மிகவாய்ச்சொல்லி தூற்றினார்



யாக்கோ நூலைத்தானும், மாறினார் சித்தர்முனி சாத்தி
ரத்தை மாற்கமுடன்றான் கெடுத்தார் யான்மையாமே. 928

பான்மையுடன் வெகுமாந்தற் கெட்டுப்போயி பாழாகி
சாத்திரத்தில் முழுகிப்போனார், வான்மையுடன் யாக்கோபு
செய்தபாவம் வைகுண்ட மவர்தனக்கு கேள்விமெத்த,
மேன்மையுடன் சாபமது நேர்ந்ததாலே மேலுக்குமின்ன
மொரு பிறவிகாண, மாண்மையுடன் தண்டனைகள் மிகவு
மாகி மன்னருக்கு மறுபிறப்பில் குறைவுண்டாச்சே. 929

உண்டான முறைகளையான் கண்டுவந்தேன் உத்த
மனே வுலகுதனிற் சொல்லப்போனால், சண்டானமான
தொரு சிலதுமாண்பர் சார்பான பொய்யென்று சாற்று
வார்கள், கண்டாலும் பொய்யென்று கதறுவார்கள் சதா
காலங் கருமத்துக் கேதுவாவார், திண்டான முரமையிது
சொல்லவந்தேன் திறமான போகரிஷி கண்டதாமே. 930

கண்டதொரு சோதிமுறை யின்னஞ் சொல்வேன்
கைலாசவைகுண்ட பதியின்சேதி, அண்டமுனி சிசுபால
னவனுக்கு சீஷன்வவன்பேரு சட்டைமுனி யென்பாரப்பா
கொண்டல்வண்ணன் ராவணனாற் கிடையேசெய்து
கோடிமுறை தபசிகட்கு வின்னஞ்செய்து, தண்டவமை
தானிருந்து ரிஷிகள்சாபம் சாற்றினார் சாத்திரத்தின்
தண்மைதானே. 931

தானான சாத்திரத்திற் கிடையே சொல்லிதப்பிதங்க
ளாகவேதான் கெடுத்துப்போட்டு, கோனான யெனதையர்
காலாங்கி தம்மைக் கொண்டபடி யவர்பேரில் தோஷஞ்
சொல்லி, வேனான கருவெல்லா மறைத்துப்போட்டு வேத
முதல் சாத்திரங்கள் பொய்யாச்சொல்லி, பானான பலவித
மாய்ப் பாடிவிட்டார் பாருலகில் சட்டமுனி சரிதையாமே.

சரிதையுடன்சித்தர்முனி கோர்வையாவும் தப்பென்று
மிகவும் வெகுசாய்க்கூறி, கருதிபொரு ளாராய்ந்து
சூட்சாசூட்சம் சுத்தமுடன்றானறிந்து தன்தன் நூலை,
விரிவுடனே பாடிவிட்டார் வனர்தங்கோடி விண்ணுலகு
மண்ணுலவுங் கொள்ளாதப்பா, பரிவுடனே சொன்னது
போல் தானுஞ்சொல்லிப் பட்சமுடன் றாமுரைத்தார்
மாணாக்கராமே. 933

மாணாக்கர் வின்னூலை மெய்யென்றெண்ணி மானிலத்
தில் வெகுநாளாய் கண்டாராய்ந்து, வீணாகசாத்திரத்தின்
கோர்வைபார்த்து விருதாவாய் சுட்டலைந்து பொருளுந்
தோற்று, கோணாமல் பருந்தினது பாகம்காணார் குவலயத்
தில் மெய்ப்பொருளை பொய்ப்பொருளதாக்கி வாணாளை
தான்கழித்து மட்டிமாண்பர் மதிகெட்டு நின்றார்கள்
மகிமைபாரே. 934

பாரேதான் முப்பூவைக் கெடுத்துப்போட்டார் பல பலவாம் நூல்தோறும் பாடிப்போட்டார், நேரேதான் விதி முறைகள் யாவுங்கூறி விதிமுடிக்கு முறையனைத்துங் குரைத்துப்போட்டார், சீரேதான் சாத்திரத்தை மெய்யென் றெண்ணி சிறப்புடனே முப்பூவை முடிக்கவென்று கூரே தான் சட்டைமுனி மெய்யாச் சொல்லி குறிப்புடனே நூலதனை மாத்திட்டாரே. 935

மாத்தியே கலவரங்கள் மிகவுண்டாக்கி மன்னவர்கள் தான்மயங்க மறைத்துச்சொல்லி, நேத்தியுடன் பாடல்களை மெய்போல்சொல்லி நேர்மையுடன் திரவியங்கள் பாழாய்ச் செய்து, தூத்தியே வாதத்தை மெய்போல்சொல்லி முறை யோடு பொய்சொல்லித் துகளகற்றி, சரித்திரத்தைப் பாடி னதால் சட்டையோர்க்கு சாயமுடன் வைகுண்டப்பதியில் தீதே. 936

தீதான சாத்திரத்தைக் கெடுத்ததாலே தீங்குமிக நேர்ந்துதங்கே வைகுண்டத்தில், நீதமுடன் வாக்கினைகள் மிகவுண்டாகி நித்தியமும் வைகுண்டச் சார்புதன்னில், கரகமது வாண்வாசல் கோட்டைக்குள்ளே கால்நடையாய் தான்நடந்து சுத்திவந்து, போதமுடன் விசாரணைக்குத் தீமுன்பாக பொற்கமுடன் கொண்டுவந்து நிறுத்தினரே.

நிறுத்தையிலே சட்டமுனிக் காயனேகம் நிருதியுடன் ருன்செய்தார் வூசியாலே, திருத்தமுடன் நாவதனிலூசி கொண்டுதிகழுடனே வுள்ளுக்கில் காட்டாரப்பா, பருத்த முள்ள வாக்கினைகளில்லை கண்டேன் பாழ்நரகமவருக்கு யில்லையப்பா, பொருத்தமுடனவர்தனக்குப் புத்திசொல் லிப் பொங்கமுடன் மறுவாசல் கொடுசென்ருரே. 938

சென்றுமே யவர்தனக்குப் பதமமாத்தி சிறப்புடனே எந்நாளுங் கைலைதன்னில், குன்றின்மேல் சாவலுடன் ரிஷிகள்பக்கல் கொற்றவனு மெமதர்ம ராஜன்பக்கல், வென்றிடவே தவயேக புஷ்பசாங்கம் வேகமுடன் முனிவ ருக்கு பூசைமாற்கம், அன்றலுடன் சாதகாலமங்கிருக்க வவர்தனக்கு கட்டளைகள் விதித்திட்டாரே. 939

விதிக்கையிலே யின்னமொரு வதிசயங்கள் வினவு டனே யாமுரைப்போ மின்னங்கேளு, துதித்தலுடன் மச்ச முனிதன்னையானும் துப்புரலாம் வைகுண்டப்பதியில் கண்டேன், மதிக்கவே சாத்திரத்தை மறைவுபேசு மகத் தான நூல்களையே கெடுத்துப் போட்டார், பதிக்கமுடன் மாந்தர்கட்குப் பொய்பொய்யாகப் பாடிவிட்டபடியிலே கர்மமாச்சே. 940



ஆச்சென்ற படியாலே நூல்கள் தம்மை அப்பனேபல பேரும் சொல்லக்கேட்டு, கூச்சலுடன் சித்தர்முனி ரிஷி கள் வாக்கு குறையாமல் பாடிவிட்டா ரனந்தங்கோடி, மேச்சலுடன் முன்பின்னுல் சொன்னதாலே மேதினியில் மாந்தரெல்லாஞ் சுட்டலைந்து, பாச்சலுடன் மாண்டார் கள் கோடாகோடி பலபலவாம் கெட்டலைந்தோர் கோடி யாமே. 941

கோடிபேர்சாத்திரங்கள் பார்த்துமென்ன குவலயத் தில் கைமறைப்புயில்லாமற்றுன் நாடியே சாத்திரங்கள் மிகவாருய்ந்து நாணமுடன் மெய்போலப்பாடிவிட்டார், ஓடியே கோர்வைதான் மெய்யென்றெண்ணி உத்தமர்கள் கெட்டவர்கள் கணக்கேயில்லை, தேடியே திகைத்து மிக வாடிப்போனுர் தேசத்திலதிகமுண்டு தெளிவுதாமே. 942

தெளிவான சாத்திரத்தை பாடியல்லோ தேசத்தில் கீர்த்தியுடன் பெயர்தான் வேண்டும், நெளிவான நூலத னைச் செய்யாமற்றுன் நுணுக்கமெல்லா மறைப்பொரு ளாய்ச் சொன்னதாலே, ஒளியான சித்தர் முனி தங்கள் பேரில் ஓகோகோமோசமென்று நூலுஞ்சொல்லி, பளி யான சாத்திரத்தைப் பாடிவைத்தார் பாலருக்குப்பாபம் வந்து லபித்துதாமே. 943

தாமான மச்சமுனி தன்னைத்தானும் தன்மையுடன் வைகுண்டப் பதியிலப்பா, கோமானு மெமதர்ம ராஜ னுண்டே கொற்றவனைத்தானழைத்து கொடுதான் போனுர், பூமானின் மச்சமென்ற முனிவர் தம்மை புகழு டனே கேட்கலுற்றுரந்தனேரம், வசமான மச்சமுனி கூறும் வண்ணம் வாகுடனே கிட்டிருந்து கெட்டிட் டேனே. 944

கேட்டையிலேவுத்தார விடையுமில்லை [illegible]தியுடன் வாக்கினைகள் கொஞ்சந்தானும், நீட்கமுடனருன்கொ டுத்து தீர்ப்புசெய்து நீதியுடன் யெமபுரத்து வாச லுண்டே பூட்கமலதடாகமதில் காவல்வைது பொங்க முடன் சங்கரற்கு பூசைக்கப்பா, வாட்கமல புட்பமதுதான் பரித்து வளமுடனேருன் கொடுக்க நீதியாச்சே. 945

ஆச்சப்பாயின்னமொரு வதிசயங்கேள் அப்பனேயா னறிந்தவரைக்குஞ்சொல்வேன், வாச்சலுடன் தட்சணு மூர்த்தி தன்னை வைகுண்டப்பதிதனிலே கண்டேன் யானும், கூச்சலுடன் கிங்கிலியர் தூதர்தாமும் குய்யோ தான் முறையமென்று வபயமிட்டு, பேச்சுடனே தக்ஷணு மூர்த்தியாரைப் பெருமையுடன் விசாரணையில் பார்த்திட் டேனே. 946

பார்க்கையிலே தட்சணாமூர்த்தியாரும் பாடல்களை
வெகுசாமரைத்துப்போட்டார், சேர்க்கமுடன் வாதத்தை
முன்பின்னாகச் செப்பினார்திரட்டு முதலுளவு மார்க்கம்,
மூர்க்கமுடன் மருந்துவகை பாஷாணத்தை முன்பின்னால்
பேர்மாற்றி பேருறைத்தார், தீர்க்கமுடன் சொன்னதினால்
மாந்தர்யாவும் தேசத்தில் சுட்டலைந்து கண்கெட்டாரே.

கெட்டுமே போனாலும் போவதன்றிக் கெடியான
பாஷாண மாற்கந்தன்னை, தொடடுமே தானாடி மருந்துக்
கீய தோராயமாக வல்லோமுழுதும்கெட்டு வட்டமுடன்
நோய்புகலும் பாண்டமாகி மானிலத்தி லிரந்தவர்கள்
கோடாகோடி, மட்டமென்ற மருந்துகளுஞ் செய்து
வல்லோ மன்னவரும் பயித்தியங் கொண்டேகினாரே.

ஏகவென்றால் பாபமது வதிகமாகி யெழிலான நோய
துவும் சொல்லப்போமோ, பாகமுடன் செய்பாகம் கெட்
டலைந்து பாங்குடனே சாத்திரமும் பொய்யதாகி, தாக
முடன் பாஷாண வீறினாலே தாரணியில் சடலமது யிழந்
தாரங்கே, மேகமென்ற மருந்தினது வேகத்தாலே மேனி
யெல்லாம் புண்ணாகி ரோகமாச்சே. 949

ஆச்சப்பா தட்சணாமூர்த்திசெய்த அரும்பவத்தை
யெமதர்மராஜன் தானும், மாச்சலுடன் கண்டறிந்து மூர்த்
தியாற்கு மகாதீர்ப்பு கொடுப்பதற்கு மனமுமானார் பூச்ச
லுடன் சாத்திரத்தைக் கெடுத்ததாலே புண்ணியனேவுந்
தனுக்கு சொற்பதண்டம், தீச்சலுடன் சிவயோகி ரிஷி
களுக்கு சிவாலயமடபதிக்கு காவல்தானே. 950

தானான காவலது யிருக்கவென்று தன்மையுடன்யெம
தர்மராஜன்றானும், கோனான தட்சணா மூர்த்தியாற்கு
கொடுந்தவசி முனியோர்க்கு வாளதாக, பானான பரமசிவன்
பட்சத்தாதே பாலித்தா ரென்னாளும் வைகுண்டத்தில்,
தேனான தட்சணா மூர்த்தியாரும் தேவனிட கோட்டைக்
குள் ளிருந்திட்டாரே. 951

இருந்தாரே கைலகிரிவைகுண்டத்தில் யெழிலாக
சுவாமிகட்குத் தொண்டனாகிப், பொருந்தவே யவர்களி
டம் பூசித்தேதான் பொங்கமுடன் சதாகாலம் வைகுண்
டத்தில், திருத்தமுடன் தாமிருந்தார் தட்சணாயன் தீர
முடன் கதைதனையே செப்பவென்றால், வெரித்திடவே
லோகத்து மாண்பரெல்லாம் வெறும்பொய்ய மென்று
சொல்லி மேவுவாரே. 952



மேவவே யின்னமொரு தெரிசனங்கேள் மேன்மையு
டன் யான் கண்டவரைக்குஞ் சொல்வேன், காவலுடன்
ரோமரிஷி தன்னைக் கண்டேன் கருவாக வைகுண்டந்
தன்னிலப்பா, ஆவலுடன் வவர் பக்கல்யானுஞ் சென்
றேன் அப்பனே கேள்விகளநேகமுண்டு, பாவமெனும்
புண்ணியங்களிரண்டைத் தானும் பராகரித்து கேள்வி
களுங்கேட்கலாச்சே. 953

கேட்கவென்றால்வவர்மீதில் குற்றமெத்தக் கேள்வி
களுமங்குண்டு சொல்லொண்ணாது, நீட்கமுடன் சாத்தி
ரத்தை வெகுவாய்ச் சொல்லி நீடாழியுலக மெல்லாமயங்
கப்பண்ணி, தாட்கையுடன் ரோமரிஷி கோர்வையாவும்
தன்மையுடன் முன்பின்னாய்ப் பாடிவைத்தார், மீட்கமுடன்
கோர்வைதனில் நாலுகாப்பு மாளவே முன்பின்னாய்ப்
பாடினாரே. 954

பாடினார் பரிபாஷையாவுஞ்சொல்லி பாடல்களில்
கைமறைப்பு வதீதஞ்சொல்லி, மூடியே கருவுளவு முப்பின்
மார்க்கம் மூதண்டபூநீரின் போக்குயாவும், தேடியே பரி
பாஷை திரட்டையெல்லாம் தெளிவறவே செய்யாதமார்க்
கந்தன்னில், கோடிமனு சுட்டலைந்து கெட்டுப்போனார்
குவலயத்தில் பாவம்வந்து நேரலாச்சே. 955

நேரவே பாவத்தால் கருமந்தங்கி நெடிதான வைகுந்
தபதியிற்சென்று, கூரவே யெமதர்மராஜன் பக்கல்கொற்
றவனும் ரோமரிஷிதன்னைத்தானும், பாரமுடன் சாத்தி
ரத்தை தலைமேல்வைத்து பாங்குடனே தூதர் கொடு
சென்றுபோனார், மாரலுடன் வைகுண்டப் பதியில்தானும்
மார்க்கமுடன் குற்றமது நேமித்தாரே. 959

நேமித்தார் குற்றமதை நேரதாக நெடுங்காலம் தானி
ருக்கவிடை யுண்டாச்சு, சாமியுட பக்கலிலே யனேகஞ்
சித்தர் சதகோடிசூரியர் போல் கொண்டுவந்தார், வாமி
யுடன் வைகுண்டப் பதியில்தானும்வாகுடனேயம்பாளும்
தானிருக்க, பூமியிடங்கொடுவந்த சித்தர்தானும் புகழ்ச்சி
யுடன்கோடியுடன் லக்கில்லைதானே. 957

தானானயின்னம்வெகு வதிசயங்கள் தன்மையுடன்
சொல்லுகிறேன் தரணியோர்க்கு, வேனான விலாடரிஷி
தன்னைக்கண்டேன் வியாசமுனி சூதமுனி தன்னைக் கண்
டேன், கோரான குருமுனி தன்னைக் கண்டேன் கொற்ற
வனார் போகரிஷிதன்னைக் கண்டேன் தேனான திருமூலக்
கூட்டத்தார்கள் தெய்வபுறபதிதனிலே கண்டேன் பாரே.

பாத்தேனே சிவவாக்கியர் தன்னைக்கண்டேன் பால
கனாமிடைக் காட்டார் தம்மைக் கண்டேன், மூர்த்தவனாம்
வகப்பேயர் சித்து தம்மை முடியோடுஞ் சடையோடும்

யானுங் கண்டேன், திர்த்தகிரிதனிலிருந்த காசிநாதர்
தீறமுடன் கொண்டுவரக் கண்டேன்யானும், ஏர்த்திடவே
வரரிஷிதன்னைக் கண்டேன் யெழிலான சுந்தரரைக் கண்
டேன்தானே. 959

கண்டேனே யின்னம்வெகு சித்துதம்மை கைலாயபர்
வதமாம் வைகுண்டத்தில், அண்டமுனி ராட்சதர்கள்
கோடாகோடி அவனியிலே யிருந்துவந்தோர் சொல்
லொண்ணுது, கொண்டல்வண்ணன் மைத்துனனும் தரும
ராஜன் கொற்றவனும் தம்பிமுதல் யாவுங்கண்டேன்,
பண்டுலவ மாலையணி சத்துருசங்காரன் பாவையெனும்
சீதைதனைக் கண்டேன்தானே. 960

கண்டேனே ராவணனுர் சூர்ப்பனகைதானும் கைலங்
கிரிவைகுண்டப் பதியிலோரம், தொண்டரெனும் அறு
பத்து மூன்றுபேர்கள் தோராத பரவனுச்சியாருங் கண்
டேன், விண்டேனே விண்ணுலகில் சேதியெல்லாம் விருப்
பமுடன் நானறிந்தேன் சிலதுகாலம், கொண்டல்வண்ண
னச்சுதனுமங்கிருக்க கோபாலன் ருயாருங் கண்டிட்
டேனே. 961

கண்டிட்டேன் வைகுண்டப் பதியில்தானும் கரியா
மல் சேனையது கூட்டந்தன்னை, தொண்டிட்ட ஆழ்வார்
கள் கூட்டந்தன்னில் தொடர்ந்துமே யவரிடமாம் பக்கஞ்
சென்றேன், விண்டிட்ட ஆழ்வாதிசாத்திரங்கள் வெகு
மோசந்திருவனுடன் பின்பின்னு, துண்டிட்ட சாத்திரத்
தில்தோஷமுண்டு தூராதிசிவன்தனை தோஷித்தாரே. 962

தோஷித்து சிவன்தன்மேல் தோஷஞ்சொல்லி தேராய
மாகவல்லோ நூலைமாற்றி, பாஷியங்கள் தோருமல்லோ
பரமன்றன்மேல் பாடிவைத்தார் தூஷணைகள் மெத்த
வுண்டு, காசினியி லாயிரத்தெட்டு சிவாலயங்கள் கட்டி
ஞர் வெகுகோடி மாந்தறப்பா, பூசிதமாம் திருப்பதி
நூற்றேயெட்டு பொங்கமுடன் கட்டினுர் சூட்சந்தானே.

தானுன சூட்சாதி தேவஸ்தானம் தாரணியில் சொற்ப
மதாய் கண்டதுண்டு, பானுன பரமசிவன் சிவாலயங்கள்
பார்க்கவென்ருல் கணக்கில்லைலக் கோயில்லை, தேனுன
வாதிசேடந் தன்னுலும் தெளியாது நாவில்லைபாவுமில்லை,
மானுன பரமபதி மெத்தவுண்டு மானிலத்தில் வாழாது
மாந்தர்கேளே. 963

கேளேதான் சிவன்றனையே பழித்ததாலும் கீர்த்தி
யுடன் சாத்திரத்தை கூறலானும், நீளேதான் வைகுண்ட
பதியிலப்பா நேர்ந்துதே வெகுகோடி தெண்டந்தானும்
மீளவே சொற்பனமாம் வாக்கினேயம் மீண்டுதேதுள்வார்
தைசிஷவர்க்கம், சூளவே யவர்பக்கல் யானிருந்து சுந்த
ரனே யதிசயங்கள் பார்த்திட்டேனே, 964



பார்த்திட்டேன் வைகுண்ட பதியில்தானும் பாங்
குடனே வதிசயத்தை சொல்லப் போனுல், பூர்த்திட்ட
பாரினிலே பொய்யென்பார்கள் பொய்யென்பார் மெய்யன்
பாராருமில்லை, சாத்திட்ட வைகுண்டச் சரிதைதானும்
தேர்ந்தவரை யானுரைத்தேன் தெளிவதாக, மார்த்திட்ட
மாகவேதான் கைலைதன்னில் மகாகோடி வாக்கினைகள்
மெத்தவுண்டே. 966

உண்டான வதிசயங்களின்னஞ் சொல்வேன் உம்பர்
பிரான் பதியினது காவையாவும், திண்டான கிருஷ்ணவ
தாரந்தானும் திகழுடனே வெகுகோடி மாதர்தம்மை, பண்
டான வையகத்தில் கற்பழிந்து பாவையரை லீலையது
செய்ததாலும், கண்டேனே வைகுண்டப்பதியில் தம்மை
கரியமாலாக்கினைகள் சொற்பமாமே. 967

சொர்பமா யெமதர்ம ராஜன்ருனும் தொல்லுலகில்
ஒருவரையும் விட்டதில்லை, அற்பமா மாக்கினைகள் செய்த
துண்டு அவனியிலே யாருத்தான் மீண்டதில்லை, கற்பழிந்
தமாதருக்குமிந்தநீதி கர்த்தனது வைகுண்டப்பதியில்
தானும், முற்பவத்தில் செய்தவினை பாவத்தாலே மூளுமே
வைகுண்ட நீதிதானே. 968

காணவென்ருல் பிரபஞ்சமாய் கையப்பா கண்டவர்
கள் விண்டவர்களாருமில்லை, வேணபடி சாத்திரத்தை
மிகவரிந்து வேகமுடன் காலாங்கி பாதம்போற்றி,
நாணவே சித்தர்முனி தானடுங்க நாதாந்தக் குளிகையது
பூண்டுகொண்டு, கோணவே சொர்க்கபதி யானுஞ்
சென்று தோற்றமுடன் கண்டுவந்தேன் போகர்தாமே.

தாமான வையகத்தில் மாண்டமாண்பர் தாரணியில்
வைகுண்டப் பதியில்தானும், கோமானும் அரசர்முதல்
குருக்கள்தாமும் கோலமுடன் ராஜாதிராஜர்தாமும், பூமா
னும் சீமான்களெவரையுந்தான் பொன்னுலகப் பதிதனிலே
காணலாகும், நாமான சடலமது மண்ணேயாகும் நாதாந்
தக் காற்றது தானழியாதென்றே. 970

அழியாது மாண்டவர்களெல்லாருந்தான் வப்பனுட
பதிதனிலே காணலாகும், அழியாது வாதமந்தனெந்த
நாளும் அமரரது பதிதனிலே காணலாகும், அழியாது
மாண்டவர்களொரு காலந்தான் அப்பனே யொருகால
பெழுந்திருப்பார், அழியாது ஒருகாலமவர்தமக்கு அப்
பனே நீதியுண்டு கேள்வியுண்டே. 971

கேள்விக்கு யுத்தாரஞ் சொல்லவேண்டும் சொல்லாட்
டால் நீதியுடனுக்கினையுண்டு, தாழ்மையுட னெமதர்ம
ராஜனுக்கு சங்கமுடன் நீதிமொழி யுரைக்கவேண்டும்,

ஏழ்மையுடன் போலிருந்து நீதிபேசி நீதியுடளவர்பாதம்
பணியவேண்டும், வாழ்மையுட னுன்மீதில் கிருபைவைப்
பார் வாழலாம் சொற்கபதி வாழலாமே. 972

வாழ்வுதான் வையகத்தில் பொய்யேவாழ்வு வாழ்ஞ
ளும் வீணுளும் பாழ்நாளாகும், தாழ்வுடனே சாத்திரத்தை
மிகவாருய்ந்து சாங்கமுடன் ஞானுெப மிகவுஞ்சொல்வார்
கேழ்மையுடன் மாசான வைராக்கியஞ் சொல்வார் கேடு
வரும் பாவவினையறியார் தாமும், ஊழ்வினைகள் தாம
றிந்து நடந்துகொள்வோர் உத்தமனே லோகத்து மாந்த
ராமே.
973

மாந்தராம் சடலத்தை மெய்யென்றெண்ணி மானிலத்
தில் வெகுகோடி பாடுபட்டு, சர்ந்தமுடன் தேகமதை
நிறுத்தவென்று சதாகாலம் வையகத்திலிருப்பதாக
போந்தமுடன் காயாதிகற்பந்தன்னை பொங்கமுடனுண்டு
மல்லோ கற்பங்கொண்டு, வேந்தர்களும் விதிகரசவித்தை
யெல்லாம் வேண்டியே விருப்பமுடன் படித்திட்டாரே.

படிக்கவே வஷ்டாங்கங் காணவென்றும் பாருலகில்
வசியனுயாகவென்றும், துடிக்கவே வாதமதை யறிய
வென்றும் துப்புறவாய் முப்பூவை முடிக்கவென்றும்
மடிக்கவே சரக்குக்குச் சத்ருதானும் மார்க்கமுடன் கண்ட
ரிந்த சித்தனென்றும், வெடிக்கவே சமாதிக்குள்ளிருப்பே
னென்றும் வேதாந்தம் பேசியல்லோ விழலாய்ப்போச்சே.

போச்சென்று விடுகாதே யின்னங்கேளு புதுமை
யுடன் கண்டவரையா முஞ்சொல்வோம், மாச்சலுடன்
மோகனங்க ளறியவேண்டு மாராட்டமானதொரு வெழுத்
தைப்பாரு, கூச்சலன்றி சமாதிதனி லிருந்துமென்ன
கோடான கோடியுகங் கண்டுமென்ன, மூச்சடங்கிபோன
பின்பு ஒன்றுமில்லை முனிகோடி தவசிகளு மாண்டார்
தாமே.
977

தாமான கோடியுக மிதுவேயாகும் தாக்கான சித்து
களுமிப்படியேயுண்டு, நாமான படியாலே சத்தலோகம்
நாதாக்கள் போக்குமுதல் யாவுங்கண்டோம், நேமமுடன்
சித்தரெல்லா மிப்படியேதானும் நேர்மையுடன் நிஷ்டை
யிலே யிருந்துமாண்டார், வாமமுடன் பூலோகவதிசயங்
கள் வகுத்துரைத்தார் வண்மைகளும் நேகந்தானே. 977

தானேதான் ராஜாதிராஜரெல்லாம் தாரணியில் சாத்தி
ரத்தை மிகவறிந்து, மானமுடன் சிவயோக நிஷ்டைநின்று
மானிலத்தில் தவசு பெரியோரைப்போல, தேனமிர்தங்
கொண்டுமல்லோ வாசிபூட்டி தேசத்திலிருந்தார்கள் சித்த
ரெல்லாம், மேனகையை கண்டுமல்லோ மையல்கொண்டு
மேதினியிலாண்டவர் கோடியாமே. 978



கோடியாஞ் சித்தர் முனி மாந்தரெல்லாம் குவலயத்
தில் மண்ணுசை பெண்ணுசையாலே, தேடியே செம்
பொன்னுசையாலும் திடங்குலைந்து மாண்டார்கள் மாந்த
ரெல்லாம், நாடியே நாதாந்தச் சித்தருக்கு நல்ல வழி
யொருவருக்குங் கிடைப்பதில்லை, பாடியே நூல்தனையே
பார்த்து பார்த்து பரதவித்து யிருந்தார்கள் கோடிபேரே.

பேரான தத்துவங்க ளறிந்துமென்ன பேருலகில்
ஞானிகளாயிருந்துமென்ன, நேரான நல்லவழி தெரிந்து
மென்ன நேர்மையுடன் அறியாமல் யிருந்துமென்ன,
கூரான சாத்திரத்தை கற்றுமென்ன குவலயத்தில் வெகு
கால மிருந்துமென்ன, தூரான கெட்டவழி சென்று
மென்ன துறையோடு காலம்வரை யொன்றுங்காணே.

காணவே பிரபஞ்ச வாழ்க்கையாவும் கருத்துடனே
கொண்டவர்க்கு ஒன்றுமில்லை, தோணவே நூலாதி நூல்
கள் தோறும் துடர்ந்துமே சடலமதை யிரக்கவென்று,
மாணவே சித்தர்முனி ரிஷிகளெல்லாம் மாரட்டமாக
வல்லோ நூல் செய்தார்கள், வேனவே காலாங்கி நாதர்
தம்மால் வேகமுடன் கண்டறிந்த வார்சொல்வேனே.

சொல்லவென்ருல் பூலோகமிடங் கொள்ளாது சுருதி
பொருள் சாத்திரங்கள் மிகவும் பொய்யாம், வெல்லவே
மெய்யொன்றும் புகலவில்லை வீணிலே சாத்திரத்தை
பாடிப்போட்டார், அல்லலுடன் தேகாதி தேககாலம்
அலைச்சலுடன் சாத்திரத்தை பாாத்துமாண்டார், கொல்
லனது வீதியிலே வூசிவிற்ற கொடிதான கதைபோல
982
என்முன்னுச்சே.

ஆச்சென்ற தேகமது நித்தியா நித்யம் அப்பனேயா
மறிந்தவரைக்குஞ் சொல்வோம், மூச்சடங்கி எனதையர்
காலாங்கிநாதர் மூன்றுயுக கோடிவரை சீனந்தன்னில்,
பேச்சொன்று மில்லாமல் சமாதித்தன்னில் பிணம்போல
யிருந்தாரே சிலதுகாலம், வாச்சலுடன் வாசிதனை அடக்
கிக்கொண்டு வையகத்தில் சிலதுநாளாயிருந்திட்டாரே.

இருந்திட்ட காலாங்கி தம்மைப்போல எழிலான சித்
தர்முனி நாதரெல்லாம், பொருந்தியே பூவுலகில் வாசி
கொண்டு பொன்னுலக நாட்டுக்குப் போனுர் தாமும்,
திருந்தியே யொருவருந்தானிருந்த தில்லை சிறப்புடனே
வைகுண்டஞ் சேர்ந்தாரங்கே, வருந்தியே யழைத்தாலும்
வருவதுண்டோ வருங்காலந்தானிருந்தால் வருகுந்தானே.

**சீனபதியில் கமலமுனி சமாதி அதிசயம்**

தானேதா னின்னமொரு புராணஞ் சொல்வேன் தாக்
கான சீனபதி தன்னில் யானும், காலான கமலமுனி சமாதி

பக்கல் காத்திருந்தேன் வெகுகோடி காலமப்பா, தேனுன
கமலமுனி சீஷரென்பேர் தேவனிடசமாதி யிடங்கண்
டேன் யானும், பானுன சமாதிக்கு முன்னதாக பட்சமு
டன் தாமிருந்தார் பண்பதாமே. 985

பண்பான சீஷவற்கந் தன்னைக் கண்டேன் பட்ச
முடனுன வரைக் கேள்வி கேட்டேன். திண்பாண சீஷர்
களுமதிதஞ் சொன்னுர் திகழான வதிதமது என்னவென்
ருல், வண்பான முதற் சீஷன் சொன்ன மார்க்கம் வாகு
டனே வருஷமது கொண்டு செய்தேன், கண்பான
விரண்டாங்கால் சீஷன்தானும் கனமுடனே மூன்ருண்டு
தொண்டனுமே, 989

தொண்டனும் மூன்ருங்கால் சீஷன்தானும் சோர்
வின்றி நாலான்டு தன்னில் தானும், விண்டமுடன்
நாலாங்கால் சீஷன்ருனும் விருப்பமுடன் நாலாவதாண்டு
மட்டும், கண்டிதமாய் ஐந்தாங்கால் சீஷன்தானும் கருத்
துடனே வாராண்டு தன்னில்மட்டும், அண்டிடவே ஆராங்
கால் சீஷன்ருனும் அப்பனே ஐயிரண்டு பத்து மாண்டே.

மத்தான ஏழாங்கால் தன்னிலப்பா பாகமுடன்
மூவைந்து மூண்டதாக, சித்தான எட்டாங்கால் தன்னில்
தானும் சிறப்புடனே பஞ்சதசம்மாண்டு தானும், கத்தான
சித்தர்களும் தொண்டு செய்து சூழ்ந்துமே வெகுகோடி
காலம் பார்த்து, வத்தான சமாதியிடங் காத்திருந்தார்
வாகுடனே கமலமுனி வாக்கு கேளே. 988

வாக்கான கமலமுனி சித்துதாமும் வாகுடனே சமா
திக்கு போகும்போது, நோக்கமுடன் கமலமுனி சித்து
தாமும் நுணுக்கமுடன் தாமறிந்த வித்தையெல்லாம்,
பாக்கமுட னுபதேசஞ் செய்யவென்று பான்மையுடன்
சித்தர்களை யழைத்து தாமும், சோக்கமுடன் யவர்க்
களிக்க வேண்டுமென்று சுந்தரரை தாமழைத்து கூறி
னுரே. 989

கூறினுர் சீஷர்களே கேளுமென்பார் குவலமுடி மன்
னரெல்லா மென்னைக் காத்தார், தேறினதோர் சீஷர்க
ளெட்டுபேர்கள் தெளிவுடைய பாலர்களுமாகையாலே,
காரியங்களான தொருவித்தை மார்க்கம் கருத்துடனே
கேளுமென்ன குருவுதானும், பாரினிலே இதிகாசத்தை
விட்டு பாழான வித்தைகளை கேட்டார் தாமே. 990

கேட்கையிலே ஒரு சீஷன் வதியங் கேட்டான்
கேடுள்ள ஒரு சீஷன் மோகனமுங் கேட்டான், நீட்ட
முடனொரு சீஷன் வாதங்கேட்டான் நினைவான வாதத்தை
போதியென்ருன், வாட்ட முடனொரு சீஷன் ஞானங்கேட்
டான் நலமான குளிகையது கேட்டார் தாமே. 991



கேட்டாரே குவிகையது மார்க்கந்தன்னை கெவன
முடன் குளிகையது வேண்டுமென்ருன், பூட்டமுடனொரு
சீஷன் புனிதங் கேட்டான் புகழான லோகத்தின் வுளவு
கேட்டான், காட்டமென்ற வொருசீஷன் நிதியுங்கேட்
டான், பாட்டிமை யொருசீஷன் தவத்தைக் கேட்டான் 992
மார்க்கமுடன் பலபலவாய்க் கேட்டார் பாரே.

பாரே தான் சீஷவர்க்கங் கேட்கும்போது பலபலவாம்
துரையோடு முறைமை யெல்லாம், நேரேதான் குருவான
கமலந்தானும் நேர்மையுடன் சமாதிக்குச் செல்லுமுன்னே,
கூரேதான் அவரவர்க்குத் தக்கயாகம் குறிப்புடனே தாம்
கொடுத்தார் கமலர் தாமும், ஆூரேதான் சீஷவர்க்கமான
பேர்க்கு உகமையுடன் ஞானுேபமோதிட்டாரே. 993

ஓதவே யுகங்கோடி காலந்தானும் வுத்தமனும் சமா
திதனிலிருந்தாரங்கே, நீதமுடன் சமாதிக்கு பூசைமாற்
கம் நேர்மையுடன் நாள்தோறுப் செய்திருந்தார், காத
மெனும் சீனபதி மூன்றுகாதம் கமலமுனி தன்னையவர்
மாந்தரெல்லாம் வேதமுடன் சிவபூசை மார்க்கத்தோடு
வேள்விகளு மநேகமதாய் நடத்துவாரே. 994

நடத்துகையில் சீனபதி சென்றபோது நாதாந்த
காலாங்கி நாதர்தம்மை, திடத்துடனே குருதனையே
காணவென்று தீரமுடன் சமாதிக்கு சென்றேன்யானும்,
மடபதியா மாயிரம்பேர் சீஷவர்க்கம் மகத்தான குரு
தனையே காணவென்று, வடகோடி கானகத்தில் மாந்த
ரெல்லாம் வளமுடனே சமாதிபக்க லிருந்தார்காணே.

காணவென்ரு லவர்பெருமை யாருக்குண்டு காசினி
யிலிவரெல்லா லொருவர்க் குண்டோ, வேணபடி மகிமை
யது யாருக்குண்டு வேதாந்த காலாங்கி நாதர்க்குண்டு,
நீணமுடன் சமாதிதனைக் காணவென்று நேர்மையுட
னங்கிருந்தேன் சிலதுகாலம், தோணவே யெனதையர்
காலாங்கிக்கு சோடசமா முபசாரஞ் சொல்லொண்ணுதே.

சொல்ல வென்ருல் ராஜாதி ராசர்க்கில்லை சூரியாதி
சந்திராதி யவருக்கில்லை, வெல்லவென்ரு லிவர்போலும்
சித்து முண்டோ மேதினியில் கண்டதில்லை சமாதிசித்து,
புல்லவே திரிகால பூசை மாற்கம் போற்றுவார் காலாங்கி
தம்மைத்தானும், அல்லவே யவர்கிருபை வேண்டுமென்று
வனேகமாம் கோடிபேர் வருணிப்பாரே. 997

தருணமுடன் சித்தாதி சித்தரெல்லாம் வளமையுட னவர்தனக்கு வணக்கஞ் சொல்வார், கருணையுட னவர் பாதம் தொழுது நிற்பார் காவலுடன் சித்தர்களுஞ் சமாதி பக்கம், தருணமது சமாதிக்கு முன்னதாக தாழ்மையுடன் காத்திருந்த சித்துதாமே. 998

சித்தான காலாங்கிக் கிருபையாலே சென்றேனே குளிகையது பூண்டுகொண்டு, சத்தான லோகமெல்லாஞ் சுத்திவந்தேன் சாங்கமுடன் காணாத காட்சியெல்லாம், முத்தான காண்டமது மூன்றுக்குள்ளே முடிவுபெறப் பாடிவைத்தேன் லோகமாற்கம், நித்தமுமே காலாங்கி யாமுந்தானும் நிதந்தோறும் பூசையிலே நினைக்கின் றேனே. 999

நினைக்கையிலே காரியங்களெல்லாஞ்சித்திநீணிலத்தி லவர்போலுஞ் சித்தமுண்டோ, வனைதோறுங் காலாங்கி நூலைப்பார்த்து மாற்கமுடன் வாச்சித்தே பூசிப்பார்கள், சினத்தவரு முதவாவார் காலாங்கி தம்மால் சீருலகில் கீர்த்தியுடன் வாழலாகும், வினைப்பயனும் விட்டுமல்லோ புண்ணியனுவாய் வேதாந்தத் தாயினது வருளுமுண்டோ.

அருளான செல்வமுண்டு சியானமுண்டு அப்பனே குரு சாம்பிரதாயமுண்டு, பொருளுண்டு புகழுண்டு போக முண்டு பொன்னுலகப் பதிதனிலே யிடமுமுண்டு, யிருளகன்று சூரியன்போல் விலாசமுண்டு எழிலான வஷ்டவித பாக்கியமுண்டு, மருளகன்று வைகுண்டப்பதி யென்னுளும் வாழ்வுண்டாய் வாழ்த்துமல்லோ யிருப்பார் முற்றே. 1001

**போகர் சந்தகாண்டம்-7000**

மூன்றுவது காண்டம்

முற்றுப்பெற்றது.

உ

கடவுள் துணை.

மஹா மகுத்துவம் பொருந்திய

# போகமுனிவர்

திருவாய் மலர்ந்தருளிய

# சத்தகாண்டம்-7000

## நான்காவது காண்டம்

### காப்பு

ஓடியே சதாசிவந்தான் பாதங்காப்பு
வுரைத்திடுவேன்போக ரேழாயிரத்தில்
தேடியே சத்த சாகர மதாக
திறமாகப்பாடிவைத்தேன் சத்தகாண்டம்
கூடியே காலாங்கி ஞதர்பாதம்
குருவானநாதாக்கள் பாதம்போற்றி
ஆடியே வயித்தியமாம் நாலாங்காண்டம்
அப்பனேவாதமது காப்பதாமே

தானான சத்தசாகரமுங்கண்டேன் தாக்கான சத்ததீவு களுங்கண்டேன், வேனான சத்தநதி தானுங்கண்டேன வேசமுடனஷ்டதிக்கு தானுங்கண்டேன், கோனான வஷ்ட பாலகரை கண்டேன் கொடிதான வஷ்டதேவாலயங் கண்டேன், பானான பராபரியை மனதிலெண்ணி பாங்கு பெற பாடிவிட்டேன் காண்டம்பாரே. 2

### பூநீரெடுக்க விதி

பாரேதான் குளிகையது பூண்டுகொண்டு பண்புடனே சீனபதி சென்றேன்யானும், நேரேதான் சீனபதிமூன்று

காதம் நேர்மையுடன் சுத்திவந்து வுளவுகண்டேன், சீரே
தான் பூமிவளம் பானும்கண்டேன் சிறப்பான யளர்பூமி
யிதுவேயாகும், கூரேதான் நாதாக்கள் கண்டதில்லை
கொற்றவனே யான்கண்டேன் பூநீராமே. 3

ஆமேதான் பூநீரின் வளப்பங்கேளீர் அகிலமெலாம்
பூநீர்கள் மெத்தவுண்டு, தாமேதான் பாண்டிவள மெத்த
நாடு தாக்கான யாவடையார் பிரம்மதேசம், நாமேதான்
கண்டபடி சேரநாடு நாதாக்கள் சோழவள மெடுப்பார்பூமி
போமேதான் நெடுங்காலந் தன்னிற்சென்று பொங்க
முடன் தானெடுப்பார் பூநீராமே. 4

பூநீரிலின்னம்வெகு தளமுஞ்சொல்வேன் புகழான
காளஸ்திரீ சிவகெங்கைதானும், பூநீராம் பாலைவனம்
பூம்பாரையாகும் புகழான திண்டிக்கல் பசுமலையுமாகும்
சோநீராந் தில்லைவனம் காளிங்கமடுவு சொர்னமென்ற
பூதியது வடமதுரையாகும், தேநீரான் தென்மதுரை
வயோத்திநகராகும் தெளிவான பொன்னகரந் தானு
மாமே. 5

ஆமேதான் பாஞ்சாலன் பூமிவளமாகும் அப்பனே
தென்புவனம் வடபுவனமாகும், தேமேதான் தீர்த்தகரை
யாகும் தேன்விளையும் நர்மதாவட மேருமாகும், போமே
தான் யித்தாதிதேசநாடு பொலிவான வளர்பூமி யென்ன
லாகும், பாமேதான் பூநீறுயெடுக்குங்காலம் பகருவேன்
காலமது செப்பக்கேளே. 6

கேளேதான் சித்திரா பருவமுன்னும் கெணிதமுடன்
பங்குனிக்கு முன்னதாக, தாளேதான் அமாவாசை பூர்ண
வட்டம் நாள்தேடி பரிபாஷை தாமுணர்ந்து, பாளேதான்
போகாமல் நாளைப்பார்த்து பாரினிலேயெல்லவரும் நூலா
ராய்ந்து, வேளேதான் சித்தர்நூல் நுணுக்கம்பார்த்து
வேதாந்தத்தாயி னுபவாசங்கொண்டே. 7

கொண்டேதா னுபவாசமிருந்துகொண்டு கோடான
கோடிமலை தேசங்கண்டு, கண்டேதான் காணாறு தேசம்
விட்டு காடுமலை நதிவனமுந்தான் கடந்து, விண்டேதான்
பூநீறுமெடுக்குங்காலம் விண்ணுலகில் சித்தர்முனி சொல்
லைப்போல, அண்டர்முனி ராட்சதர்களிருக்குங்காலம் அங்
கனவே தாம்போனார் மாந்தர்தாமே. 8

மாந்தராந்தவயோகி சிவயோகிதானும் மார்க்கமுடன்
முப்புவனங் காணவென்று, வேந்தர்பதி முதலான தேச
ராஜர் வெகுகோடி மாந்தரெல்லா முப்பைக்காண, போந்த
முடன் நிலாப்பருவம் தன்னிற்சாமம் பொங்கமுடனடுசாம
வேளை தன்னில், சாந்தமுடன் பிரணவத்தின் மாறல்
கொண்டு சட்டமுடன் பூநீமெடுப்பார்தாமே. 9



எடுக்கையிலே சீனபதி தேசந்தன்னில் யெழிலான
பூநீரு மெடுக்கு மார்க்கம், அடுக்குடனே யோராளின்கீழ்
மட்டமாக அப்பனே யவர்பூமி தன்னைத்தோண்டி, இடுக்
கமென்ற குழிதனிலே மண்ணைத்தானும் யெழிலாகத்தான்
பறப்பி மூடிப்போடு, ஒடுக்கமுடன் கெட்டணைகளதிகங்
கொண்டு வுத்தமனே பன்னாடை மேலேசாத்தே. 10

சாத்தியே மூங்கலென்னும் குழல்கள்தன்னை சட்ட
முடன் தானிருந்து சாற்றக்கேளு, நேர்த்தியுடன் குழல்
தனையே பூமிதன்னில் நேர்மையுடன் தானடித்து சில்லு
போடு, பூர்த்தியுடன் மூன்றாநாள் வெடியச்சாமம் பொங்க
முடன் தான்திறந்துபார்க்கும்போது, காத்திரமாய் கதிர்
கதிராய் பூநீர்தாமும் கதிரவன்போல் பூர்த்திருக்கக் கண்
டிட்டோமே. 11

கண்டிட்டோம் வாதிகளுமொன்றாய்க் கூடிகடுகெ
னவே பூநீரை யெடுத்துவந்து, அண்டமெனும்கற்சுண்ண
முடிப்பதற்கு அரகரா பிண்டமென்ற செயநீர் தன்னால்,
விண்டபடி மேகமென்ற பனிநீர் தானும் விருப்பமுடன்
தானெடுத்து பூநீர்தன்னை, கொண்டபடி பாண்டமதி
லிட்டு மைந்தா கூறுவேன் காச்சலென்ற விபரங்கேளே.

கேளேநீ பூநீரைக்காச்சவேதான் கெனிதமுடன்தான்
கரைத்து மைந்தாகேளு, மாளவே மறுபாண்டந் தெளி
விருத்து மார்க்கமுடன் காச்சிடுவாய் பூநீர்தன்னை, மாள
வேதசதீட்சையிப்படியே சேயாகு மானிலத்தில் செய்வார்
கள் யிந்தமார்க்கஞ், சூளவே யின்னமொரு பாகங்கேளு
சுரரொளியாம் பரிதிமுகம் செய்வார்பாரே. 13

செய்வாரே தினந்தினமும் தீட்சையப்பா செம்மை
யுடன் பூநீரை ரவியில்வைத்து, பெய்யவே பனிநீரைபூநீ
ரில் விட்டு பேரான ரவிமுகத்தில்வைத்தபோது, துய்யவே,
பூநீராம் பூவே பார்க்கும் துகளற்ற வெண்மையது கதிர்
போலாகும், மெய்யுடனே யிப்பாகஞ் செய்வார்மாந்தர்
மேதினியிலின்னமொரு பாகங்கேளே. 14

பாகமென்றால் பாகமது சொல்லொண்ணாது பாவை
யுட கருவான செயநீராகும், போமென்ற செயநீராம் பிண்
டமாகும் பொங்கமுடன் பனிக்குட மாஞ்சலமேயாகும்,
வேகமென்ற பூநீரை விட்டுமைந்தா விருப்பமுடன் சலம
தனில்கரைத்து நீயும் சாகமுடன் தசதீட்சை யிப்படியே
யாகும் சட்டமுடன் செய்துவந்தால் பூர்க்கும்பாரே. 15

பூத்ததொரு பூவெடுத்துச் சொல்லக்கேளும் புகழான
பூவுடனே பச்சைப்பூரம், நேர்த்தியுடன் வீரமது கால

தாக நேர்மையுடன் சீனமது வரையதாகும் கீர்த்தியுடன் வெடியுப்புச் சமனதாக கிருபையுடன் பூரமது தானுங் கூட்டி, மாத்தியே சரக்கெல்லா மொன்ருய் சேர்த்து மன் னவனே கல்வமதில் மாட்டிடாயே. 16

மாட்டவே பிண்டமென்ற செயநீர்தன்னுல் மயங்கா மல் நாற்சாமமரைத்துதீரு, வாட்டமுடன் பில்லைதட்டி காயவைத்து வளமாக வகல்தனிலே மூடிமைந்தா, நீட்ட முடன் சீலையது வலுவாய்ச்செய்து நேர்மையுடன் ரவி தனிலே காயவைத்து, நாட்டமுடன்தான்போடு கோழி யாக நாயகனே பில்லையது பூர்க்குந்தானே. 17

தானுனபில்லையது பூர்க்காவிட்டால் தகைமையுடன் புடமதுவும் பின்னும்போடு, கானுனபில்லையது கறுப்பே ராது கடுஞ்சுறுக்கு ஒருவேளை சிவக்கும்பாரு, மானுன பில்லையது மறுபடியுமப்பா மயங்காமல் செயநீரிலரைத் துக்கொண்டு, கோனுன குருவருளால் பில்லைதட்டி கொப் பெனவே ரவிதனிலே காயப்போடு. 18

போடவேயில்லையது சத்தமிட்டால் பொங்கமுடன் வோட்டிலிட்டு சீலைசெய்து நீடவே ரவிமுகத்தில் காய வைத்து நேர்மையுடன் சீலையது வலுவாய்ச் செய்து, கூடவே கோழியென்ற புடந்தான்போடு கொப்பெனவே பில்லையது பூர்க்கும்பாரு, தேடவே பூநீராம் சுன்னமாகும் தெளிவான சரக்கெல்லாம் தட்டிப்போடே. 19

போமென்று விடுகாதே பின்னுங்கேளு போக்கான சரக்கெல்லாங் கட்டுதற்கு, வேமென்ற சத்துருவு மித்து ருவுஞ்சேர்த்து வேகமுடன் கவசமது செய்துகொண்டு, நாமென்ற வாக்கு பொய்யாகாமற்ருன் நலமாக சட்டி தனில் மணல்தான்கொட்டி நாமென்ற மேல்சட்டி கொண்டு மூடிசட்டமுடன் தானெரிப்பாப் சாமம்நாலே.

நாலானசாமமது யெரித்தபோது நலமான பில்லை யது பூர்க்கும்பாரு, காலான பில்லையது காரமெத்த கடுங் காரச் சுண்ணமென்றே செப்பலாகும், பாலான சுன்ன மதை மஞ்சள் தன்னில் பாச்சினுல் மஞ்சளது சிவந்து போகும், மேலான சரக்குக்குக்கால நாகும் மேன்மையுடன் சரக்கணைத்துங் கொல்லுந்தானே. 21

கொல்லுமே பாஷாண முப்பத்திரண்டும் கோடிதான சரக்கணைத்தும் நீற்றுப்பாரு, வெல்லுமே நவலோகம் நீறிப்போகும் வேகமுடன் சூதமது துடித்துக்கொல்லும், புல்லுமே காரசாரங்கள்தானும் புகழான முப்புவால் மடிந்துபோகும், கல்லுகளுமுப்பு வால்நீறிப்போகும் காடல்லாந் தான்விளையும் மூலியாமே. 22



மூலியாம் சாறுவரா தழைகளெல்லாம் முப்பூவிலுனு வளவு பட்டிட்டாக்கால், கேலியாம் தழைகளெல்லாம் சல மாய்ப்போகும் கெவனமுடன் குளிகைக்கு முப்புவாகும், வாலியப்பெண் ருதுவாவாள் முப்புவாலே வளமுடனே காயமது கற்றூணகும், சாலியனும் வண்ணுனும் காண மாட்டான் சட்டமுடன் முப்பூவின் வளமைபாரே. 23

வளமுடனே முப்பூவைக் கண்டபோது வாகுடனே யேமத்துக்குறுதியாச்சு, பளமையுடன் வயித்தியமும் வாதயோகம் பலிக்குமடா முப்பூவின் மார்க்கத்தாலே, இளமையுடன் முப்பகலு முப்புவாலே வெழிலுடனே நீயு மொரு சித்தனுவாய், நளபதியுமுப்பூவை யுண்டபோது நரைதிரையு மற்றுமல்லோ ராஜனுமே. 24

ராஜனும் ராசாதி ராசனுவான் நலமான முப்பூவின் தன் மார்க்கத்தால், போஜனுமே யிவர்க்கீடு சொல்லப் போமோ பொங்கமுடன் முப்புவின் பெருமையாலே, கோஜபீஜங்களது முப்பூவாலே குவலயத்தில் காயகர்ப்பம் முப்பூவாலே, பாசமுடன் சித்தர்முனி ரிஷிகள்தாமும் பாரிலே கர்ப்பமுண்டு யிருந்தார்தாமே. 25

இருந்தாரே கோடிரிஷிசித்தர் தாமும் எழிலான முப் பூவை முடித்துக்கொண்டு, திருத்தமுடன் சமாதியினி லிருந்துகொண்டு சீர்பெறவே யனேகவித சித்துசெய்தார் பொறுந்தவே பூமியிடப் பாகங்கண்டு புகழான முப்பூ வைக் கண்டறிந்து, வருந்தியே முடித்தவர்கள் கோடா கோடி வளமுடனே பதங்கெட்டார் கோடியாமே. 26

கோடியாஞ் சித்தர்களிலொருவருண்டு குவலயத்தில் குருமுடிப் போனெருவனுண்டு, தேடியே பார்த்தாலுங் கிடைப்பதில்லை தேசத்தில் விட்டகுறை நேருமானுல், கூடியே யவர்தனக்குக் கிட்டும்பாரு கிட்டாவிட்டால் விட்டகுறை யில்லையென்று, நாடியே கர்மானுபவத்தி னுலே நாட்டமுடனறிந்துகொள்ள நீதியுண்டே. 27

உண்டான சாத்திரத்தில் அனேகஞ்சொன்னுர் உத்த மர்கள் ரிஷிகோடி முனிவர்தாமும், அண்டமுடன் பிண் டங்களை யறியாமற்ருன் அனேகமதாய் சுட்டலைந்து கெட்டார்கோடி, கண்டபடி சாத்திரங்கள் தாறுமாராய் காசினியில் தம்மனம்போல் பாடிவிட்டார், விண்டவர்கள் கண்டவர்களாருமில்லை விருப்பமுடன் பூநீரைக் கொடுத் தார்தாமே. 28

தாமான பிண்டமது நடுப்பிண்டத்தை தாக்கான
மடிப்பிண்டம் தலைப்பிண்டம்தான், கோமான மாதர்களுங்
கொண்டுவந்து கொப்பெனவே பூநீறுகாச்சவென்று,
நாமான சாத்திரத்தி னுளவுகாணார் நாட்டிலே மெஞ்ஞூலை
பாராமற்றான், சாமானமான கவியேழாயிரத்தை சாங்க
முடன் பாராமற் கெட்டார்தாமே. 29

கெட்டான கோடிமனு ராஜரெல்லாம் கேடுகெட்ட
கருமிகளு மாந்தர்தாமும், சுட்டாரே முப்பூவைக்காணமற்
றான் சுட்டதினு லாபமென்ன லோபங்கண்டார், விட்ட
குறை விருந்ததினு லின்னூர்பார்த்து விருப்பமுடன் வாத
மதை காணலாச்சு, இட்டமுடன் சத்தகாண்டமேழாயிரத்
தில் யெழிலாகப் பாடிவைத்தேன் மறைப்பில்லைதானே.

மறைவான பொருளெல்லாங் கண்டாராய்ந்து மார்க்
கமுடன் வாதமதைச்செய்யவேண்டும், குறைவான பொரு
ளறிந்து சேர்க்காவிட்டால் குற்றவரும் வாதத்துக்குறுதி
யில்லை, நிறைவான பொருளையல்லோ விட்டார்மாந்தர்
நீநிலத்தில் வெகுகோடி கெட்டார்வீணில், பறைவான
சாத்திரத்தை முன்பின்னாக பாடுபட்டு பாராமல் மடிந்தார்
தாமே. 31

மடிந்ததினால் மானிலத்தில் கர்ப்பமுண்டு மறைவாக
மண்மேலே யிருந்தார்தாமும், முடிந்ததொரு காயாதிகற்
பந்தன்னை மூதுலகில் பாடுபட்டுக் கிடையாமற்றான்,
படிந்ததொரு கூடுவிட்டுக்கூடுபாய பாழான தேகமதை
மெய்யென்றெண்ணி, வெடிந்தமட்டு மாயாதிசாகரத்தை
விட்டொழிக்க வகைதேடி மான்பர்தாமே. 32

மாண்பான பயிர்களெல்லா மொன்றாய்க்கூடி மயக்க
முடன் சாத்திரத்தில் பிரிவுதோன்ற, காண்பான வவரவர்
கள் செய்தகாப்பு கடையேடு முடியேடு நடுவேடுந்தான்,
வீண்பான முப்புவகை மெய்யென்றெண்ணி விண்ணுல
கில் சாத்திரத்தின் வழிபோகாமல், சாண்பைம் பையானு
லுந்தடி கொண்டடிக்கத் தாரணியில் மறந்துவிட்ட
காதையாமே. 33

காதையா மிப்படியே தெளிவுகாணார் காசினியில்
ஊசிகொள்ள திராணியற்று, பாதையாம் துலாங்கொண்ட
கணக்கைப்போல பாரினிலே குருமுடிக்க சூட்சங்காணா,
மேதையாம் பஞ்சணையிற் சுகங்கண்டாற்போல், மேதினி
யில் சாத்திரத்தைப் பாாத்துமென்ன வேதையாம் பொரு
ளறிந்து போனவாக்கு விருப்பமுடன் வாதமதுலபிக்கும்
பாரே. 34



பாரேதான் வண்டபிண்டமறியவேண்டும் பாரினிலே
யண்டமதை யாருங்காணார் நேரேதான் முப்பூவுபார்க்கும்
போது நெடிதான அண்டமென்ற கல்தானப்பா, கூரான
பிரதிவினால் வுற்பத்தியாச்சு கொடிதான விஷக்கல்லு
அண்டக்கல்லாம், சேரேதான்சிற்றண்டம் பேரண்டமா 35
கும் சிறப்பான நடுவண்டமென்னும்பாரே.

பேரான சுக்காங்கால் பிரம்மக்கல்லாம் பெருமை
மூதண்டக் கல்லுமாகும், சீரான படிக்கக் கல்லென்றும்
பேரு சிறப்பான குழியானை யென்றும் பேரு, தாரான
குடுகுக்கல்லென்னும்பேரு தாக்கான கண்ணகக்கலென்
றும் பேரு, பாரான பச்சையென்ற கண்ணக்கல்லு பாங் 36
கான வுதகமென்ற கல்லுமாச்சே.

கல்லான கல்லதனைக் காணவேண்டும் காசினியிலா
ருந்தான் காணமாட்டார், புல்லான பூநீரையறியமாட்
டார் புகழான சோணக்கல்கண்ணமப்பா, மல்லான மன்
கட்டியென்பார்பாரு வையகத்தில் தாமறியார் மகிமை
தன்னை, செல்லான புத்துக்குள்ளிருக்குங்கல்லாம் ஜெக 37
ஜோதி மகிமைதனை காணார்தாமே.

காணாரே கருவாளி காண்பானால் காசினியில் விண்
டிடுவான் கருத்துளோர்க்கு, தோணவே பூவுலகில் தொட்
டாலுந்தான் தொல்லுலகில் மாண்டிடுவார் மாந்தர்தாமும்
நாணவே சாத்திரத்தை மிகவாராய்ந்து நாதாக்கள் சொல்
லுறையும் மிகவுங்கேட்டு, நீணவே கற்பாந்திரமிருப்ப 38
தற்கு நீணிலத்தில் கைமறைப்பு யாவுங்கேளே.

கேட்கையிலே சாத்திரமாம் யுகாந்தகாமங்கீர்த்தியுட
னிருப்பதற்கு வாசிநோக்கு, நீட்கமுடன் வாசியிலே
யிருந்துகொண்டு நீடாழியுலகத்தை வெறுக்கப்பண்ணி,
சூட்சமுடன் சின்மயத்தை யறிந்துபோற்றி சுருதியுள்ள
கருவிகறணாதி யெல்லாம், தாட்கமல பீடமதை பணிந்து 39
போற்றி சதாகாலசமாதியிலே யிருக்கான்றே.

## முப்பூவினால் சரக்குசத்துருசங்கம்

நன்றான சரக்குகளைக் கொல்லவென்று நாட்டமுடன்
சத்துருமித்துருவும் கண்டு, குன்றான மலைகளிலே பாஷா
ணமுண்டு கொப்பெனவே கொண்டுவந்து பூநீர்சுண்
ணம், பன்றான வுமிழ்நீரால் மத்தித்தேதான் பாலகனே
சுண்ணமென்ற பாஷாணத்தில், தன்றான கட்டிக்கு
வங்கிபூட்டி தகைமையுடன் கோழியென்ற புடத்தைப் 40
போடே.

போடயிலே பற்பமது கடுங்காரந்தான் பொலிவான
கண்டர்தமைத் கொல்லும்பாகு, சாடவே முன்போல

வுமிழ்நீர் தன்னில் சட்டமுடன் தான்குழைத்து புடத்தைப் போடு, நீடவே கடுங்காரச் சுன்னமாகும் நேர்மையுடன் சத்துருவுக் காலமித்ரன் வாடவேதிரியாதே மைந்தாகேளு வளமுடனே சுண்ணமதை யெடுத்துக்கொள்ளே. 41

கொள்ளவே சூதமதுக் கணுவுபோடு கொடிதான யேமரசங் துள்ளிப்போகும், விள்ளவே சூதமதுமடிந்துதா னால்வேகமுடன் கவனமென்ற குளிகையாச்சு, மெள்ளவே குளிகையது கொண்டபேர்க்கு மேதினியில் சதாகாலம் சாவேயில்லை, உள்ளபடி காலாங்கி நாதர்பாதம் உத்த மனே நாம்வணங்கி பாடினோமே. 42

பாடினோம் போகரிஷி சொன்னமார்க்கம் பாருலகில் பொய்யது மெய்யேயாகும், தேடியே யிவ்வேதை முப்பின் மார்க்கம் தெளிவுறவே பாடிவிட்டேன் சத்தகாண்டம், நீடவே நான்காவதிந்தகாண்டம் நீடவே சாகரம்போலிது வேயாகும், கூடவே யேழாயிரக் காண்டமப்பா கூறவே முடியாது திண்ணந்தானே. 43

திண்ணமுட னிப்பாகம் யாருஞ்சொல்வார் திறமை யில்லாசுந்தரனார் மறைந்தார்தாமும், வண்ணமுடன் கொங்கனவர் கரிதிசொல்லி வளமையுடன் தாம்மறைத் தார் பிண்டப்போக்கை, சுண்ணமுடன் செய்வதற்கு கொங்கணவர்பாதம் சுத்தமுடன் செயநீரை மறைத்துச் சொன்னார் எண்ணமுடனிடைக்காடார் தமராகந்தர் ஏத்த முடனென்போல சொன்னார்பாரே. 44

சொன்னதினால் விதிமுறைகள் காணாதப்பா துரை கோடி முகங்கோடி தொந்தங்கோடி, வின்னமிலா செய்வ தற்குரிஷிகள் தாமும்விட்டகுறை வெட்டவெளி யென்று விட்டார், நன்மையாய் நாதாக்களடிபணிந்து நலமுடனே பாடிவைத்தேன் முப்பூதீட்சை, பன்னவேயிந்நூலின் தீட்சைபார்த்து பாகமுடன் செய்பவனே வாதியாமே. 45

## கேசர வித்தை

வாதியா மின்னமொரு மார்க்கம்பாரு மகத்தான வேதை யிதுகளுக்குவேதை, சோதியாங் கேசரத்தின் வித்தையப்பா சுளுக்கிலே யெவருந்தான் சொல்லமாட் டார், நீதியுடன் சூதமென்ற ராஜர்தம்மை நேர்மையுடன் சேரதுதான் கொண்டுசென்று, பாதியுமை தான்பணிந்து மைந்தாநீயும் பட்டமுட னுப்பூவில் ஒருமாபோடே. 46

போடயிலே மதயானை வீரடங்கி பொங்கமுடன் சூதமதுகட்டும்பாரு, கூடயிலே சூதமது குளிகையானால்



கோடானகோடி வித்தையாடலாகும் வாடையிலே சீவனத் துக்கில்லாவிட்டால் வளமாக வங்கமதை யுருக்கிக் கொண்டு மூடயிலே குளிகையது போட்டும்பாரு முனை யான வங்கமது வெள்ளியாச்சே. 47

ஆச்சென்ற வெள்ளியது பூசைக்கப்பா அப்பனே நாதாக்கள் முனிவர்தாமும், மாச்சப்பா வாதவித்தை செய்துமல்லோ மகதேவ வாலயங்கள் பூசைசெய்தார், பாச்சவே தேவாலயங் கட்டுதற்குபாகமுடன் தங்கமென்ற போக்குச் சொல்வேன், காச்சவே செம்புதனை யுருக்கிக் கொண்டு கருவான முப்பூவைப் போட்டிடாயே. 48

போடவே செம்பதுவுமூறலேகி பொலிவானதங்கமது வாகும்பாரு, நீடவே முன்சொன்னக் குருவைத்தானும் நினைவாக நவலோகந் தன்னிலீய, கூடவே மாற்றதுவு மதிகங்காணும் குணமான யேமமது யென்னலாகும், தேடவே சீவனத்துக்கில்லாவிட்டால் திறமான முப்பூவை யறிந்துகாணே. 49

காணவேயின்னமொரு கருமானங்கேள் கருத்துடனே சொல்லுகிறேன் மைந்தாநீயும், தோணவே பூனாகஞ்சேர் தானப்பா தோற்றமுடன் தானெடுப்பாய் செம்பையல்லோ பூணவே செம்பதனை பாணைபண்ணி போக்கான சூதமது உள்ளேவிட்டு, வேணவே பூநீரில் குன்றிபோட வேக முடன் மேற்பரணை கொண்டுமூடே. 50

மூடவே மண்சீலை வலுவாய்ச்செய்து முனிநாதர் சொற்படியே புடமேபோடு, கூடவே கோழியென்ற புடத் தைப்போடு குணமுடனே புடமாறி யெடுத்துப்பாரு, வாடவே சூதமது மடிந்துமேதான் வளமான களங்கமது போலேயாகும், தேடவே செம்புதனில் நூற்றுக்கொன்று தெளிவான களங்கமதை கொடுத்திடாயே. 51

கொடுக்கையிலே மாற்றதுவு மெட்டேயாகும் குண மான பொன்னதுவுஞ் ச[illegible]போலாம், விடுத்துமே பொன்னதனை வாரடித்து விருப்பமுடன் பூங்காவிபுடத் தைப்போடு, கொடுத்திடவே மாற்றதுவும் பத்தேயாகும் தேராமல் பசுமைநிறச் செம்பொன்னாகும், எடுத்துமே சிவா லயங்கள் கட்டநன்று யெழிலான சூதமென்ற குருவுமாமே.

குருவான சூதமதை பின்னுமைந்தா கொப்பனவே ரவியெடுத்து பரணைகுள்ளே, திருவான பரணைதனில் வைத்துப்பின்பு திகழுடனே கெந்திதனை களஞ்சிபோடு,

மருவானபரணை மூடிப்பின்பு மார்க்கமுடன் புடம்போட கட்டிப்போகும், வுருவான களங்கமது வாகும்பாரு வுத்த மனே களங்கெடுத்து செப்பக்கேளே. 53

செப்பவென்றால் நாவில்லை பாவுமில்லை செம்மையுடன் வெள்ளிதனில் நூற்றுக்கொன்று, ஒப்பமுடன் தானுருக்கி கொடுத்துப்பாரு ஓகோகோ நாதாக்கள் வித்தையாகும், அற்பமென்று நினையாதே மைந்தாகேளு அரசர்களுமிந்த முறைகாணமாட்டார், சொற்பமுடன் மாந்தருக்குவுண் மையாக தோற்றவே யிந்தமுறை தெளிந்திட்டேனே. 54

தெளியவே யின்னமொரு மார்க்கம்பாரு தோற்ற முடன் நாமுறைப்போ மாந்தர்க்காக, ஒளிவுடனே சீனபதி மார்க்கத்தார்கள் வொக்கமுடன் செய்துவரும் வித்தை யாகும், வெளியாக செத்தவரை காண்பதற்கு வெட்க முடன் ஜாலமென்று சொல்வேன்பாரு, வளியான வட்டா ரந் தன்னிலேதான் வளமுடனே மாளியொன்ற செய்தார் தாமே. 55

### போகர் செத்தவரைக் காணுதலும் அவர்களிடம் பேசுதலுமாகிய குரளிஜாலமாளிகை

தாமான மாளிகையாஞ் செப்பக்கேளு தடநீளம் சதுர மது சொல்வேன்பாரு, வாமான குறுக்குவறை யிருபதா கும்வாகான நெடுக்குவரை நாற்பதாகும், நாமானகணக்கு வகை வீடுசொல்வோம் நாற்சதுர மெழுநூற்று மிருப தாச்சு, சமானமாகவல்லோ துரைகள்தோறும் சட்டமுடன் கண்ணுடி கதவுமாட்டே. 56

மாட்டவே கண்ணுடி வாசலுக்குள் மார்க்கமுடன் குழலொன்று நிருத்தியங்கே, நீட்டமுட னெழுநூற்று மிருபத்துக்கும் நெடிதான குழலொன்று வெவ்வேருகும், வாட்டமுடன் கண்ணுடி சுற்றேரந்தான் வாகுடனே காந்தமென்ற கம்பிதானும், தேட்டமுடன் தானமைத்து நடுமையத்தில் தெளிவாக குழல்தனிலே பின்னிப்போடே.

பின்னவே நாகமென்ற குழலில்தானும் பேரானகம்பி யது சேர்ந்தபோது, நன்மையாய் வேகமுடன் வாய்வி ஞலே நளினமுடன் காற்றதுவு மிகவேதங்கி, பன்னவே சப்தமது மிகவுண்டாச்சு பாங்குடனேவாசல் வழிதன்னி லப்பா, சொன்னதுபோல் செவிதைக்கு கேட்கும்பாரு பாரு சூட்சமது கருவாளி காண்பான்பாரே. 58

பார்க்கவென்றால் வாசல்முகம் வொவ்வொன்றிக்கும் பாங்குடனே பிரதமைகள் தானமைத்து, ஏர்க்கவே ஆண் பெண்ணுய் ரூபமைத்து யெழிலான வாடைகளுங்



கொண்டுசாத்தி, தீர்க்கமுடன் பூதமென்ற கண்ணுடிக் குள் திறமையுடன் பூதமதை காணலாகும், சேர்க்கவே கண்ணுடி வருக்கந்தோறும் சிறப்பான கருமையை தீட்டிடாயே. 59

தீட்டவே கருமையை நாட்டிப்பாரு திறமானவஞ்சன முமிதற்கீடல்ல, நீட்டமுடனெழுநூற்று சொச்சம்வீட்டில் நிலையான மைதனையே வமைத்தபின்பு, கூட்டமுடனெவ் வொரு கண்ணுடிதன்னில் குறிப்புடனே ரூபமதை காண லாகும், வாட்டமுடன் சிகரமது மேல்வட்டத்துள் வாகு டனே பரிதியது வொளிவுகாணே. 60

காணவே விழிதனிலே வஞ்சனமுமிட்டு கருத்துடனே பிரணவத்தை மாறிக்கொண்டு, தோணவே வெட்டவெளி தன்னில் நின்றுதோற்றமுடன் பரிதிதனை கண்டபோது, மாணவே விழிதனிலே நிமையொட்டாமல் மாற்கமுடன் கடிகையது பத்தேயாகும், பூனுவே பூமிதனில் நின்று கொண்டு புகழான நடுநெற்றி மையம்பாரே. 61

மையமாய் மட்டமது நின்றுகொண்டு மயங்காமல் விண்ணுலகம் பார்க்கும்போது, பையவே தோற்றுவது ரூபங்காட்டும் பான்மையுடன் சுயரூபந் தன்ரூபம்போல், மெய்யான தேகமது வடிவந்தோன்றும் மிக்கானரூபமது வர்ணங்காணும், பொய்யானதரிசனமு மெய்யேயாகும் போக்கானரூபமது மெய்போலாமே. 62

ஆமேதானிப்படியே ரூபங்காட்ட வனேகவிதபான் மைகளுமிதனுலாகும், நாமேதான் சொன்னபடி நான்காங் காண்டம் நாட்டிலே மானிடர்கள் பிழைக்கவென்று போமேதான் போகரேழாயிரத்தில் பொங்கமுடன் மாண்ட வரைக் காணவென்று, தாமேதான் மாளிகையொன்று செய்தேனப்பா சட்டமுடன் ஜெகஜால மாளியாச்சே. 63

ஆச்சப்பாஜகசால மாளிதன்னுல் அப்பனேயாம்கோடி வரைதான் சொல்வோம், போச்சப்பா பேசுதற்கென்ன சொல்வோம் பேரான செத்தவர்பேர் கேட்கச்சொல்லி, கூச்சலுடன் பின்னிருந்து பிரணவத்தைக் குறிப்புடனே மாறியல்லோ குறளிதன்னுல், மூச்சிருந்து பேசுமதுபேச் சைப்போலே முன்னிருந்து பேசும்வகை மொழிசொல் வேனே. 64

மொழிசொன்ன வார்த்தைக்கு முன்னேநின்று மூர்க்க முடன்குறளியது பின்னேசென்று, வழிசெல்லும் பிரதமை யின் வாசல்முன்னே வழிமடக்கி வார்த்தையது முன்னே கூறும், பழியில்லா மாந்தருக்கு செகசாலத்தை பாங் குடனே பூதமது கூறும்பாரு, முழியுடனே முகங்காட்டி பல்லைக்காட்டி மூர்க்கமுடன கோபித்துப் பேசுந்தானே.

தானான குறளியென்ற பூதந்தானும் தகமையுடன் நாம் நினைத்த காரியத்தை, வானாக மாளிகையினுள்ளே சென்று மார்க்கமுடன் ஜாலமென்ற கண்ணாடிக்குள், பானமுடனுள்ளிருந்து பேசும்பாரு பாலகன்போல் வார்த்தையது மிகவேசொல்லும், தேனமிர்தங் கொண்டதொரு சொல்லைப்போல தெளிவாக முன்னின்று பேசும்பாரே. 66

பேசுகையில் ரூபமதை யாருங்காணார் பேருலகில் மாயவித்தை ஜாலவித்தை, காசுபணங் கேட்டாலுங் கொடுக்கும்பூதம் காசினியில் பூதமதை வசமேசெய்வார், தேசலவு நாட்டுவளமெல்லாந் தோன்றும் தேசத்திலதிக மென்ற வித்தையப்பா, வீசுபுகழ் மண்டபத்தில் ஜால வித்தை வெகுவாகச் செப்புகிறே னின்னங்கேளே. 67

கேளேதான் பூதநாதி வித்தைசொல்வேன் கெடியான குறளியென்ற பூதம்தானும், வீடேதான் பிரணவத்தின் வசமதாக்கி வேகமுடன் ஜாலமென்றமாளிதன்னில் நாளே தான் போகாமல் கதிரோன்முன்னே நளினமுடன் பூத மதை யேவல்செய்து, சூளேதான் ஜாலமென்ற மாளிதன் னில் சூட்சமுடன் குறளிதனை வசியமாட்டே. 68

ஆட்டேதான் ராசாதி ராசர்தானும் அங்கனவேதான் மயங்கி வார்த்தைசொல்வார், கேட்டேதான் காலாங்கி நாதர்தம்மால் கிருபையுடன் சாலமென்ற மாளிதன்னில் நீட்டமுடன் வாசல்வழி சென்றவர்க்கு நிலையான வட்சரத்தை மாரல்செய்து கூட்டமென்ற குழல்தனிலே ஓதிப்பின்பு கூர்மையுடன் ஓசையது கேட்குந்தானே. 69

ஓசையா மெழுநூற்று யிருபதுக்குள் ஒப்பமுடன் சப் தமது கேட்கும்பாரு, ஆசையுடன் தலை மாளிமுதலில்நின்று அப்பனே நடுமாளி மையமட்டும், பூசையுடன் கடமாளி நெடுகுமட்டும் பொங்கமுடன் தந்தியென்ற கம்பியதனால், பாசையுடன் யிரும்புக்கு கம்பிமாட்டி பாகமுடன் குழல் தனிலே சில்லுபோடே. 70

போடேதான் வாசல்வழி முழுதுந்தோறும் போக்கான மையதனைத் திலதம்போடு, நீடேதான் திலதமதை பார்க் கும்போது நிலையான கோட்டைவழி மாளிதோன்றும், தேடவே வஞ்சனத்தின் மையினாலே தேசத்திலுள்ளதொரு வதிசயங்கள், கூடவே மாளிஜாலமென்ற மாளிதன்னில் குறிப்புடனே பார்ப்பதற்கு தோற்றமாமே. 71

தோற்றவே மையாழிமாளி தன்னில் துப்புரவாய் நடு மையமிருந்துகொண்டு, ஏற்றமுடனொவ்வொரு வறைகள் தன்னில் யெழிலான பிரதமையின் பக்கஞ்சென்று,



கூற்றனைபோல் குறளியிட தந்திரத்தால் கோடானகோடி வழி நடத்தலாகும், சாற்றலுடன் காலமென்ற மாளிதன் னில் சதுராகத் தானடத்த விதிகள்கேளே. 72

விதியுடனே முடிப்பதற்கு வின்னஞ் சொல்வேன் வேதாந்தத்தாயினது வருளினாலே, மதிப்போன்ற சந்தி ரனைப்போலே யொத்தமாது மையாளின்னமொரு பதுமை தானும், கதிரோனைத் தானெரிக்கும் சோதியப்பா காசினி யிலொருவருந்தான் கண்டதில்லை, துதியுடனே பூதமென்ற குறளிதானும் துப்புறவாய் வதிசயங்கள் சொல்லுந் தானே. 73

சொல்லுவதி லவர்மனதில் தோற்றமெல்லாம் சூட்சாதி சூட்சமதை கண்டுதானும், வெல்லுவது பிரண வத்தை சொல்வேன்பாரு விருப்பமுடன், அம்-இம் வங் கென்றேயேது, புல்லுதற்கு ஆங்ரீங்ரீயுஞ்சௌவும் புக ழான உயிரெழுத்து மாறல்செய்து, சொல்லுதற்கு சோட சமாம் வாலைச்சக்கரம் தெளிவுடனே போட்டுமல்லோ மாறிக்கொல்லு. 74

**உச்சாடனம்**

கொள்ளவே உச்சாடனம் வுரைப்பேன்கேளு கொடி தான பவமகற்றி நீயுமைந்தா விள்ளவே பரணமுடன் சத்திபூசை விருப்பமுடன் தான்செயதா லெல்லாஞ்சித்தி துள்ளவே வனுமாரை வரவழைத்துத் துறையுடனே வறு கோணச் சக்கரத்தில் எள்ளளவும் புசகாமல் வழிசேராமல் யெழிலான பிரணவத்தை முன்னேகூற. 75

கூறியிலேயங், மங்-சிங் கென்றேயோது கொடிதான வுருவதுதான் லட்சமாகும், தீறமுடனிருவானமாயிருந்து திறமுடனே முக்கோண வட்டத்துள்ளே, சீறலுடன் வராகிதன்னை வரவழைத்து சிறப்புடனே பூசையது செப் பக்கேளு, நேரமுடனே நடுச்சாம வேளை தன்னில் நேர்மை யுடன் மாசான கரையிருந்து செய்யே. 76

செய்யவென்றால் பூசையது வின்னங்கேளு தெளிவு டனே மசானமதில் சக்கரந்தான் மெய்வருவுங்கொண்டு மல்லோ புவனைவாலை மேதினியிம் கைவசமாய் செய்துக் கொண்டு பொய்யுடலை மெய்யென்று நம்பியேதான் புக ழான வஞ்சனத்தை மாற்றுதற்கு மைவிழியான் பாசமதை மிகவும்நீங்கி மார்க்கமுடன் தவநிலையில் நின்றிடாயே. 77

நின்றுமே வராகமென்ற சிறசின்மேலே நிலையான பதிவிளக்கை யேற்றிவைத்து, தன்றுடனே மசானத்தின் சவத்தின்மே சட்டமுடன் தீயெரிந்து வேகும்போது,

வென்றிடவே வராகத்தின் சிரசின்மேலே வினையமுடன் பதிவிளக்கே யேற்றிவைத்து, சென்றிடவே குறளிதனை வரவழைத்து சிறப்புடனே கொள்ளிதனை காவல்வையே,

வைத்தவுடன் கொள்ளிவாய்ப் பிசாசுதானும் வாகுடனே குறளிக்கு காவல்நின்று, செத்ததொரு சவத்தின் மேல் யிருந்தபன்றி சேரவே சிரசதுவும் யெகிரித்தானும், மெத்தவே ஓங்காரமிட்டுமேதான் மேன்மையுடன் குறளிக்கு யெதிர்முன்னாக, சத்தமுடன் கூச்சலிட்டு வராகன் தானும் சதுர்முகமாய் குரளிமுன் பேசும்பாரே. 79

பாரேதான் மசானத்தில் பூசைசெய்து பட்சமுடன் குறளியைத்தான் வசியஞ்செய்து, நேரேதான் ஜாலமென்ற மாளிதன்னில் நேர்மையுடன் நாலுபுறங் காவல்வைத்து, சீரேதான் செத்தவர்பேர் கேட்கும்போது சிறப்புடனே குறளிவந்து முன்னேகூறும், வேரேதான் சஞ்சார மனிதரில்லை வினாவுக்கு விடைகொடுக்கும் குறளியாமே. 80

குறளியாம் ஜாலமென்ற மாளிதன்னில் குறிப்பான நடுவாசல் திட்டுவாசல், திறமுடனே கூட்டமது யெட்டு பேராய் திறமுடனெண்திசை யாந்திக்குபாலர், மறளுடைய மேல்வாசல் முன்னேநின்று மதிப்புடைய நாகமென்ற குழல்சந்தாலே, சுறளுடனே மேல்வட்ட பரிதி முன்னே சூட்சமுடன் செத்தவரைக் காணலாமே, 81

காணலாமவரவர்கள் அடையாளத்தை கண்டுமே முகத்தெதிரே பேசலாகும் தோணவே பேசுதற்கு முன்னே தானும், தோற்றமுடன் மயினமது நிறம்போல் நிற்கும், பூணவே அந்தவண்ண மென்னலாகும் புகழான ரூபமது கண்ணிற்றோற்றும், வேணவே யுபசாரமிகவிம் பேசும் விருப்பமுடன் முன்னின்று மறையும்பாரே. 82

மறையிலே நாம்நினைந்த ரூபந்தோற்றும் மன்னவனே மயங்காதே கமதிகொள்ளாதே திரையுடனே முடியல்லோ கண்ணாடிக்குள் தீரமுடன் முன்னின்று வார்த்தைகூறும், முறையுடனே தான்புகலும் முனிநாதாகேள் முன்னின்று பேசுதற்கு பின்னேசென்று, குறையன்றி முன்னடந்த காரியத்தை கூறிடுமே மனிதரைப்போல் கூறுமாமே. 83

கூறவென்றா லெழுநூற்று யிருபதுக்குள் கொப்பனவே மந்திரத்தை யுச்சாடித்து, திறமுடன் குறளிதனை கிட்டழைத்து திகழுடனே ஞானோபதேசஞ் சொல்லி, கோறமுடன் கைதனிலே மையைப்பூசிக் கொப்பனவே கண்ணாடி மேலேவைத்து, பாறமுடன் வட்டமெத்த விண்ணைப்பார்க்க பருவமுடனுருவமது தோணும்பாரே. 84



தோணுமே ஜெகஜால மாளிதன்னில் தோற்றமுடன் கருவெல்லா மிதற்குள்ளாடும், காணுமே கையொளியில் வட்டந்தானும் களிப்புடனே மையுருவாய் காணலாகும், ஏணவே கருமறைப்பை காணலாகும் யெழிலானசமயமது வாய்க்கும்பாரு, வூணவே வட்டமென்ற பக்கம்நின்று உத்தமனே நடுமையத்திலர் தந்தீட்டேனே. 85

தீட்டையிலே கருமானமின்னமொன்று திறமுடனே செப்புகிறேன் மைந்தர்க்காக, வாட்டமுடன் ஜெகஜால கொள்ளிதன்னை வாகுடனே தானழைத்துத் திட்டங்கூறி தேட்டமுடன் பிரணவத்தை முன்பின்னாக தெளிவுடனே ஓதிவைத்தபடி நீதானும், சூட்டியே குறளிக்கு பிரணவத்தைக்கூறி சூட்சமுடன் அட்சரத்தை சுறுக்கிமாறே. 86

மாறப்பா வஞ்சமாய் வீட்டுக்குள்ளே மன்னவனே நடுமையம் நின்றுகொண்டு, கூறப்பா செத்தவரை காணவென்று குறிப்புடனே பட்சம்வைத்து காண்பதற்கு, நேரப்பா வந்தவர்பேர் வூர்தானென்ன நிலையானயிருப்பிடமும் ரூபமென்ன, ஊரப்பா முன்னிருந்த ரூபமென்ன வுத்தமனே யிறந்தபின்பு ரூபங்கேளே. 87

கேளவே வடிவத்தின் வரணங்கேளு கெடியான வாடையென்ற ரூபங்கேளு, நீளவே வாபரணப் பெயருங்கேளு நிலையான கைத்தொழிலை யின்னங்கேளு, மீளவே மரபினிட குலாச்சாரந்தான் மிக்கான வொழுக்கமென்ற வாசாரங்கேள் மாளவே மாண்டதோர் வருஷங்கேளு மன்னவனே மாதமென்ற முடிவுங்கேளே. 88

கேட்கையிலே யிறந்ததோர் நாளுஞ்சொல்லும் கெவுனமுடன் நாழிகையும் முன்னேகூறும், நீட்கமுடனடையாளம் சொல்லும்போது நிஷ்களங்க மாகவல்லோ உண்மைதோன்றும், சூட்சமுடன்குறளிக்கு திலகவித்தை சுத்தமுடன் சொல்லுகின்ற நன்மையுண்டு, வெட்கமுடன் பில்லைதனை வசியஞ்செய்று லோகமதில் வெகுசித்து வாடலாமே. 89

ஆடலாம் வெகுதந்திரம் குறளிக்குண்டு அப்பனே சூனியமுமிதனாலுண்டு, தேடவே குட்டியது மலைகுட்டி தானும் தெளிவுடனே நாம்சொன்ன காரியத்தை, ஊடவே ஒளிந்திருந்து வதைய:ச்செய்யும் வுத்தமனே யிருள்மாளி காணலாகும், நாடவே ஜாலக்காள் மோகினியுந்தானும் நலமான குட்டியென்ற வீரியனுந்தானே. 90

தானான வீரியனும் ஆரியனாய் வேண்டும் தகமையுள்ள வீரியனாயிருப்பானானால், வேனான மந்திரத்தை மிகவேபேசும் மிக்கான கிரமவிதி தானடத்தும், பானான

குருமுறைபோல் யாகஞ்சொல்லும் பாலகனே யாகமது குறுதிகூறும், தேனுன வீரியனுங் குட்டிதன்னை தெளிவு பெற லோகமதில் வசியஞ்செய்யே. 91

செய்யவே குட்டியெனும் வசியமானல் ஜெகத்திலே கோடிவித்தை யாடலாகும், பையனவே மாந்தர்மேலேவ தாகும்பாங்குடனே கல்லதனை யெறியலாகும், மெய்யுடனே ஜெகஜாலவித்தையப்பா மேதினியிலாருந்தான் செய்ய வில்லை, பெய்யவே சங்கலியன் கறுப்பன்தானும் பேரான வண்ணமா ரேழுமாமே. 92

ஏழான வண்ணமார் காவலாளர் எழிலான ஜால மென்ற மாளிதன்னில், பாழான வையன்மார் பிடாரி தானும் பச்சையென்ற தேவதையும் காளியோடு, வாழாத குமரிகளஞ் சத்தகன்னி வளமுடனே பச்சையென்ற பல்லக்குதன்னை தாழாமல் தோளதனி லெடுத்துக் கொண்டு தகமையுடன் காளிதனை தூக்குவாரே. 93

தூக்கியே ஜாலமென்ற மாளிதன்னில் துப்புரவாய் காவலுடனிருந்துகொண்டு நோக்கமுடன் தேவதையை வசியஞ்செய்து நொடிக்குள்ளே கோடிவித்தை யாடலா கும், பார்க்கவென்று லோகமதில் மார்ந்தர்பாவும், பதபதைத்து நடுநடுங்கி கதருவார்கள், வாக்குடனே வர முனக்கு பதமுந்தந்து வாகுடனே சொல்லுமென செப்புந் தானே. 94

செல்லவென்றுல் யின்னம்வெகு கூத்துகேளீர் செய லான நாதர்முனி ரிஷிகள்தாமும், வெல்லவே பூதமதை வசியஞ்செய்து வேணவுபசாரமதுவதன் கையாலே, புல்லவே யேவல்தனைச் செய்யவென்று புகழாக வசிமது செய்துகொண்டு, மெல்லவே தம்பணிக்கி ஆனதாக்கி மேன்மையுடன் சித்துகளுமாடினரே. 95

ஆடினர் வெகுகோடி காலமப்பா அவனியிலே சித்தர் களு முனிவர்தாமும், கூடியேபில்லியென்ற பூதந்தன்னை குணபடுத்தி தம்வசமாய் செய்துகொண்டு, தேடியே வெகுகோடி நிதிகள்தன்னை தேசமதில் பூதத்திவைசியத் தாலே, நீடியேகர்ப்பாந்த காலமட்டும் நீனிலத்தில் தாமி ருந்தார் சித்தர்தாமே. 96

சித்தானசித்துவகை யின்னஞ் சொல்வேன் ஜெகதலத் திலனேகவிதபூதமுண்டு, முத்தானவேதாள பூதமப்பா மூதுலகில் ராஜர்களும் வசியஞ்செய்வார், நித்தமுடன் வேதாளமுந்தானும் நேர்மையுடன் விக்கிரமாதித்தனுக்கு, சுத்தமுடன் வாகனமாயிருந்துகொண்டு தெல்லுலகில் வெகுகால மிருந்தார்தாமே. 97



இருந்துமே யின்னம்வெகு விநோதங்கேளு யெழி லான ஜாலமென்ற மாளிதன்னில், பொருந்தவே யெல்ல வரும் பார்க்கவேதான் பொலிவான யெக்காளந்தன்னை, திருந்தவே யெழுநூற்றியிருபதுக்குள் திறமான மாளிகையாம்பக்கோரத்தில், வருந்தியே தானிருத்து ஜால மாளி வாகுடனேகுடியிருப்பு கண்டோம்பாரே. 98

கண்டோமே யின்னமொரு கருமானங்கேள் கருவான நகார்ச்சுன் ஞசீர்மத்தில், தண்டுளவ மாலையணிபூண்டு கொண்டு தக்கனுட யாகமதில் தானிருந்து, கொண்டல் வண்ண னச்சுதனும் கோமான்தானும் குடியிருப்பு, கோட்டைதனில் காவல்நின்ற துண்டரிகமானதொரு ராட்சதபூதம் துடியானதேவனுபூதமாமே. 99

ஆமோதான் பூதமது தன்னைத்தானும் அப்பனே ஜாலமென்றமாளிதன்னில், போமேதான் நடுமையம் மத்தி வாசல் பொங்கமுடன் கறுவீரன் பத்திரகாளி, வேமேதான் கறுப்பண்ணன் டாகினிதானும் மிக்கான காட்டேரி சங்கிலிநாயன், தாமேதான் சொன்னபடி மசானவீறி சட்டமுடன் தெய்வங்க ளனேகமுண்டே. 100

உண்டான தெய்வங்க ளனேகமுண்டு வுத்தமனே சர்வகலைக்கியானமுண்டு, பண்டான பொய் களவு சூது முண்டு பண்பான விசுவாச மில்லைகண்டீர், திண்டான ராட்சதமாம் பூதந்தன்னில் திறளான நவகோடி ரிஷிக ளெல்லாம், கண்டிதமாய் யித்தாதி பூதந்தன்னில் காசினி யிற் கோடிவித்தை யாடலாமே. 101

ஆடலாம்பலபேத பூதந்தன்னல் வப்பனே வஷ்டகர்ம வித்தையாகும், நீடவே ஜாலமென்ற மாளிதன்னில் நேர் புடனே கோடிவரையாடலாகும், பாடவே பூதங்கள் தன்னினுலும் பாங்குடனே சங்கீதங் கூறலாகும், தேடவே எக்காள ஜாலந்தன்னை தெளிவுடனே யாட்டிவைக்கும் பூதமபாரே. 102

## பூதங்கள் பல பேதவாத்திகங்களை வாசிக்கும் ஜாலம்

பாரேதானஷ்டவித மாளிதன்னில் பாங்குடனேவஷ்ட வித வாத்தியங்கள், நேரேதானொருமாளி சின்னமாகும் நேர்ப்புடனே ஒருமாளி திரிச்சங்காகும், வேரேதானொரு மாளி பிரம்மதாளம் வேகமுடன் ஒருமாளி துத்தாரியாகும், சேரேதானொருமாளி தம்பூறுமாகும் சிறப்பான வொரு மாளி மத்தளமுமாமே. 103

ஆமேதா னொருமாளி கைத்தளமுமாகும் வப்பனே யொருமாளி தம்பறையுவாகும், வாமேதா னெட்டுவித

மாளிதன்னில் வாகுடனே பலபேத வாத்தியங்கள், நாமேதா னிருமித்த வண்ணமாகும் நலமுடனே மாளிதனில் சென்றுமேதான் பாமேதான், மந்திராட்சரத்தையோத பாடுமே பலவித வாத்தியங்கள்தானே. 104

தாஞன வாத்தியங்கள் கேட்கும்போது தகமையுடன் மாந்தரெல்லாம் பிரமிப்பாகும், கோஞனமாளிதனில் குடியிருப்பு கொற்றவனே யாருந்தானில்லை கண்டீர், தேஞனவமிர்தமது போலேயல்லோ தெளிவான வாத்தியங்கள் கூறலாகும், பாஞனபலபேத தொனிகள் தோற்றும் பாரினிலே மாந்தரெல்லாம் பிர்மிப்பாரே. 105

## போகர்கோகர்ண ஜாலம்

பாரேதான் யெழுநூற்றியிருபதுக்குள் பகருவேன் கோகர்ணஜாலந்தன்னை, நேரேதான் நெடுஞ்சாலமாளிகைக்குள் நேர்மையுடன் கிடையொன்று நாட்டியேதான், வாரேதான் நெடுங்கம்பி நாலுபக்கம் வாகுடனே தானிறுத்தி விட்டம் பூண்டு, சேரேதான் மேல்வட்டங் கயர்கள் மாட்டி சிறப்புடனே கீழ்வட்டம் மணிகள்மாட்டே.

மாட்டவே நடுக்கம்பந்தன்னிலேதான் மதிப்புடனே மேற்சிகரம் நின்றுகொண்டு, ஓட்டமுடன் கயறுதனைப் பிடித்துக்கொண்டு ஓங்கார சபதமுடன் சுத்திவந்து நாட்டமுடன் தரணிதனை யண்ணார்ந்துபார்த்து நயமுடனே குளிகைதனை வாயிற்பூண்டு, தேட்டமுடன் துதிக்கையிலே கரணம்தன்னை தெளிவாகக்காணுதற்கு ஜாலங்கேளே.

கேளேதான் வஞ்சனமாம் மையைத்தீட்டி கெவனமுடன் லாடமதில்வசியம்பூண்டு, பாளேதான் போகாமல் கருவுதன்னை பாங்குடனே தேகத்திற்பூசக்கேளு, நாளேதான் வர்ணரூபங்கெஜரூபமாக்கி நானிலத்தின்மேலிருந்து குதிப்பாயாஞல், சூளேதான் சகஸ்திரமாம் யானைதோற்றம் சுந்தரனே பார்வைக்கு வாதாயந்தானே. 108

தாஞனசகஸ்திரமாம் யானைரூபம் தகமையுடன் மாந்தரெல்லாங் காணலாகும், பாஞன பராபரத்தை காணமாட்டார் பாரினிலே கோகர்ணவித்தைக் காண்பார், தாஞனவித்தையது கோகர்ணவித்தை தேசத்தில் கிட்டாதுமாந்தருக்கு, வேஞன சீனபதி தேசத்தார்கள் விருப்பமுடன் செய்கின்ற ஜாலமாமே. 109

ஆமேதான் மச்சென்றமாளிதன்னில் அப்பனே கோகர்ணவித்தை செய்வேன், தாமேதான் கயர்தனிலே மேலேநின்று தாக்கான வூசியென்ற காந்தந்தன்னால், வாமேதான் வுச்சாணி தன்னிலப்பா வேகமுடன் நின்று



கொண்டு கரத்தைவீச, சாமேதான் சகத்திரமாங் கரங்கள் தானும் சரஞ்சரமாய் வந்துவிழக் காணலாமே. 110

காணலாம் வஞ்சனமாங்கருவிஞலே காசினியில்வெகு கோடிவித்தை காண்பீர், பூணலாம் மந்திரத்தின் வசியத்தாலும் போக்கான பிரணவத்தின் வாறலாலும், தோணவேதேவதையும் வசியத்தாலே தோற்றமுள்ள கருவியிடபேதத்தாலும், நாணவே சதாகாலம் மாளிசென்று நாட்டமுடன் ஜாலவித்தையாடலாமே. 111

ஆடலம் ஜெககோடி பதிகள்கோடி அப்பனே வெகுகாலமிருந்து கொண்டு, தேடலாம் சின்மயத்தின் கேசரமாம்வித்தை தெளிவுடனே ஆடுதற்கு யின்னங்கேளு, கூடலாம் கேசரத்திலிருந்துகொண்டு கோடான கோடி வித்தையாடலாகும், நீடலாம் வானரத்தின் வித்தை கேளும் நெடிதான அங்குதஞர் வித்தையாமே. 112

வித்தையிலே யின்னமொரு வித்தைகேளு வீரஞம் அங்குதஞர் வனுமார்தானும், நித்தமுடன் வஞ்சனமாமையைத்தானும் நீடுறவேவுள்ளங்கை தன்னிற்ருக்கி, சுத்தமுடன் கேசரத்தி லிருந்துகொண்டு துப்புரவாய் வட்சரத்தை யோதும்போது, மத்திபத்தில் நடுமைய மிருந்துகொண்டு மானிலத்தில் வஞ்சனத்தைப் போடுவாரே.

போடையிலே ஜாதிவர்ணஞ் சொல்லக்கேளும் பொலிவான நீலவிழித்தானுமாக, நீடயிலே பூனையென்ற நேத்திரமாகும் நீடாழிவஞ்சனத்தைப் பார்க்கவென்ருல், கூடையிலே குபேரனென்ற பட்டணந்தான் குவலயத்தின் நிதிகளெல்லாங் காணலாகும், தேடயிலே வனுமானும் முன்னே நிற்கும் தெளிவான தேவதையுங் காணலாமே. 114

காணயலே பிரணவத்தை யோதும்போது கருவானமைதனிலே மகிமைகேளு, தோணவே வீரபத்ரன் முன்னே நிற்பான் தோற்றுகையிலனுமாருங் கொண்டு செல்லும், பூணவே ஸ்ரீராமர் வைத்த பொன்னை பொங்கமுடன் பாதாளவஞ்சளத்தில், நாணவே யனுமாரும் மிகவே சொல்லும் நாட்டமுடன் நிதியெடுக்க ஜாலமாச்சே. 115

## போகர் அஞ்சனத்தில் ராமர் திரவியத்தையெடுத்தது

ஆச்சென்று விடுகாதே யின்னங்கேளு அப்பனே யான்கண்டவரைக்குஞ் சொல்வேன், நாச்சலுடனனேழு நூற்று சொச்சம்வீட்டில் நடுவான மத்திமத்தில் சதுரம் போடு, வீச்சுடனே பதினைந்து வரைதான் போடு விவரமுடன் குறுக்குவறை பதினைந்தாகும், ஏச்சலுடன் நெடுகுவறைபதினைந்தாகும்எழிலான நூத்தியம்பதரையுமாச்சே,

அறையான வீடுமுனை சூலம்போடு அப்பனே ரீங்காரங்கொண்டுமாறு, திரையோடு ஓங்காரமுள்ளடக்கி திட்டமுடன் எட்டியென்ற பீடமீதில், முறையோடு மௌனமதாயிருந்துகொண்டு மூன்றெழுத்து மைந்தெழுத்தும் ஓதித்தீரு, சிறையான வைரவனும் முன்னே நிற்பான் சீறலுடன் பிரணவத்தை யோதுவீரே. 117

ஓதுகையில் அஞ்செழுத்தை யுள்ளடக்கி உத்தமனே னவ்வெழுத்தை மவ்வெழுத்திலூணி, தீதுரவே பகையாளி தன்னைக்நோக்கி திட்டமுடன் கற்பூரவொலிதான் கொண்டு, காதலுடன் வட்சரத்தை யுள்ளமர்த்தி கருவாகச் செய்பவனே சித்தனாகும், நோதலுடன் வஞ்சனத்தை கையில்தீட்டி நோக்கமுடன் செய்பவனே சித்தனுமே.

ஆமேதான் பிரணவத்தை யுச்சரித்து ஆண்டவனைத் தாங்கினைந்து வருளும்வோதி, தாமேதான் பாதாளவஞ்சனத்தை தாரணியிலெல்லவருங்கண்டு மெச்ச, வேமேதான் சத்துருமித்துரு தானும் வேகமுடன் சென்றுமல்லோ வுறவுபேசி, நாமேதான் ரீங்காரம் வுள்ளடக்கி நாட்டமுடனோங்காரம் உள்ளே பூட்டே. 119

பூட்டுகையில் பிரணவத்தை யோதும்போது பொங்கமுடன் சத்துருமித்துருவுமாகும், நாட்கையில் நசிமசிமசி யென்றேயோத நாசமடா வஞ்சனத்தின் தயிலத்தாலே, வாட்டுகையில் குறளிமுதல் பூதபேதம் வஞ்சனாதேவி முதல்வசியமாகும், சூட்டுகையில் காலனவனெதிரே நிற்கான் துரைராஜவஞ்சனத்தின் மையின்போக்கே. 120

போக்கான காலாங்கிநாதர்பாதம் பொங்கமுடன் யான்வணங்கி சீனதேசம், நோக்கமுடன் காடுமலைவனாந்திரங்கள் நொடிக்குள்ளே சென்றுமல்லோ வேதை பார்த்தேன், தாக்கவே சீனபதி தேசத்தார்கள் சட்டமுடனெந்தனையுங் குருவாயெண்ணி, வாக்குடனே குருமொழியாஞ் சீஷனென்று வசனித்தார் கோடியுகம் வசனித்தாரே.

வசனித்தார் சீனபதி மாந்தரெல்லாம் வறைகோடி திசைகோடி வகுக்கக்கோடி, நிதமுடனே யென்வாக்கு மெய்றென்றெண்ணி நீடாழியுலகமெலாம் வசனிப்பார்கள், தசமுடனே தாரணியி லஞ்சனத்தைத் தாக்குடனே வெகுமாந்தர் செய்துபார்த்து, பிசகில்லாப் பிரணவத்தை மெய்யென்றெண்ணி பேருலகில் மாந்தரெல்லாந் துதித்திட்டாரே. 122

துதித்தாரே காலாங்கி நாதர்தம்மை தோற்றமுடன் யென்னாளும் வாசீர்மித்து, மதிப்புடனே யவர்பாதம் தான்வணங்கி வகையுடனே யெப்போதும் கருணை



கூர்ந்து, மதிப்புடனே சமாதிதனிலிருந்துகொண்டு சதாகாலம் லாடமதில் மையேபூண்டு, விதிப்பயனை தானெண்ணி விண்ணின்மீதில் வெகுகாலம் தானிருந்தார் மாந்தர்தாமே. 123

### வைத்தியசூட்சமுப்பூ

தாமான வின்னமொரு மார்க்கம்பாரு தயவுடனே மானாக்கள் பிழைக்கவென்று, கோமானும் பங்குனி சித்திரையிலப்பா கொற்றவனேபூநீறு விளையுங்காலம், மானான பூநீரைத் தானெடுத்து மார்க்கமுடன் செப்புகிறேன் மைந்தாகேளு, பானான பூநீரைப் படிதான்ரண்டு பாகமுடன் வாரிவந்து செப்பக்கேளே. 124

செப்பவென்றால் கற்சுன்னம் படிதான்நான்கு தெளிவானவமுரியது படிதான்பத்து, ஒப்பமுடன் நல்லெண்ணை படிதான்வைந்து வுத்தமனே யிரண்டையுந்தான் கலக்கிக்கொண்டு, நெப்பமுடன் தெளிவிறுத்துப் பின்னுங்கேளு நேர்புடனே தான்காய்ச்ச வுப்பேயாகும், துப்பறவேயுப்பதுவு மிகவேபூர்க்கும் துறையாக யுப்பதுவைபத்து முறைகாச்சே. 125

காச்சிடவே சாம்பலது செப்பக்கேளு கருவான சாம்பலது எருச்சாம்பலப்பா, நீச்சென்ற வெருச்சாம்பல் கொண்டுவந்து நிசமான குழம்பதுவைத் தானெடுத்து, பாச்சியே சல்லாவை மேலேபோட்டுப் பாகமுடன் குழம்பதுவை மேலேயூத்து, ஏச்சலென்ற வுண்டைதனை யெடுத்துக்கொண்டு யெழிலான ரவிதனிலே காயப்போடே. 126

காய்ந்தபின்பு பாண்டமதிலிட்டுமைந்தா கவனமுடன் வரைப்பாண்டம் போட்டுமேதான், தோய்ந்திடவே மல்லியென்ற யிலையை மைந்தா சுத்தமுடன் வதன்மேலே வைத்துக்கொண்டு, தோய்ந்திடவே மேற்சட்டிக்கொண்டு மூடித் தெளிவாகசீலையது வலுவாய்ச்செய்து, பாய்ந்திடவே தீயெரிப்பாய் நாலுசாமம் பதமுடனே தானெடுப்பாய் பின்னுங்கேளே. 127

பின்னுங்கேள் பேரியிலே வளர்ந்தபிண்டம் பேரான யிறச்சியுடன் வதிகங்கொண்டு, வின்னமுடன் துவாரமது விட்டுமைந்தா விவரமுடன் வீரமதுவொன்றேயாகும் கன்னலுடன் பச்சையென்ற பூரந்தானும் கருவானபூநீறும் சரியாய்ச்சேர்த்து, பன்னவே சிப்பிக்குத் துவாரமிட்டுப் பாலகனே யிம்மருந்தில் குன்றிபோடே. 128

குன்றியா மருந்துதான் போட்டபின்பு குமுறவே தளவாயாஞ் சட்டிதன்னில், வென்றிடவே யடுக்கடுக்காய் பரப்பிமைந்தா மேல்மூடி காற்றில்லா வொடுக்கந்தன்னில்

பன்றிடவே வைத்தவுடன் சலமிறங்கும் பட்சமுடன் ஜெய
நீரை யெடுத்துப்பாலா, தான்றிடவே மேற்சொன்ன பூநீற்
சேர்த்து சாங்கமுடன் ருனரைப்பாய் சாமம்நாலே. 129

நாலான சாமமது வரைக்கும்போது நலமானவுர
வண்டு குழியானைதானும், காலான சூதமுடன் பச்சை
பூரங் கருவான வாறுபுள்ளி தண்டுஞ்சேர்த்து, பாலான
சீனமுடன் சாரஞ்சேர்த்து பாகமுடன் தானரைப்பாய்
லகுவாக, வேலான பில்லையது தட்டிமைந்தா வேகமுடன்
ரவிதனிலே காயப்போடே. 130

போடேதான் பில்லையது காய்ந்தபின்பு பொங்கமுடன்
பேரண்டஞ் சுத்திசெய்து, நீடேதான் வகல்தனிலே கீழ்
பரப்பி நேர்மையுடன் பில்லைதனை மேலேவைத்து, தூடே
தான் மேலுமந்தப் பொடியைப்போட்டு துப்புறவாய் மேல்
மூடி சீலைசெய்து, காடேதான் ரவிதனிலே காய்ந்தபின்பு
கனமாகக் கோழியென்ற புடந்தான்போடே. 131

புடமதுதான் தீயாறி யெடுத்துப்பாரு பொங்கமுடன்
சுண்ணும்பா மட்டிபோலாம், திடமுடனே பத்துமுறை
யிப்படியேபோடு திறமான சுண்ணமது வாகும்பாரு, தட
மான சுன்னமது யெடித்துக்கொண்டு தகமையுடன்
பேரண்டம் சிற்றண்டத்தோடு, கடமான சிப்பியொடு
நண்டுதானும் கருவான நத்தையொடு சமனதாமே. 132

நத்தையுட னிவையெல்லா மொன்ருய்க்கூட்டி நலம்
பெறவே சிற்றண்டக் கருவாலாட்டி, முத்திபெற மூசை
யிட்டு வூதிப்பாரு வுத்தமனே சுண்ணும்பா யிருக்கும்பாரு
பத்தியுடன் வுலையில்வைத்து வூதும்போது பாங்கான
சுண்ணும்பா யிருக்கும்பாரு, வெத்தியுடன் சுண்ணமதை
யெடுத்துக்கொண்டு வேதாந்தத்தாயினது வருனைப்
போற்றே. 133

போற்றியே சுண்ணும்பைத் தானெடுத்துப் புகழாக
மூசையொன்று பிடித்துமேதான், ஆற்றியே முன்சொன்ன
முப்புச்சுன்னம் அப்பனேதானெடுத்து மூசையிட்டு, தூற்
றியே தேவதைக்குப் பூசைசெய்து துறைபோல முறை
போல சீலைசெய்து, மாற்றியே சுண்ணும்புச் சீலைசெய்து
மயங்காமல் புடம்போட நீறிப்போமே. 134

நீறியதோர் பற்பத்தை யெடுத்துக்கொண்டு நினை
வாகயிப்படியே பத்துமுறைபோடு, கூறியதோர் பற்பமது
குருபற்பமாகச் சுகுணமான காரமென்ற காலனுகும், மீறி
யதோர் சரக்கெல்லாங் கொல்லுங்காலன் மிக்கானபற்மது
குருவுமாகும், தோறியதோர் பற்பமதிலெந்தபாகம் தெளி
வாகச் செய்தாலும் தாக்கிடாயே. 135



தாக்கவென்ருல் கிரதங்கள் லேகியங்கள் தகமை
யுள்ள செந்தூரம் பற்பம்யாவும், நோக்கமுடன் குளிகை
கள் பாடம்யாவும் நுணுக்கமுடன் மாத்திரைகள் கட்டு
வகையாகும், சூட்சமுடன் தயிலங்களெண்ணை முதல்யா
வும் சுளுவான சூரணங்கள் ரசாயனங்கள் முதலாய்,
தூக்கமுடன் கடுகளவு பட்டால்போதும் துரையான மருந் 136
தெல்லாம் ஆறுமாமே.

வீருனவவுஷதங்கள் முப்பூபட்டால் விடுபட்டுபோகு
மடா பிணிகளேது, கூருன வவுஷதங்கள் காரமெத்த
குடிலமுடன் நோயெல்லாஞ் சுண்ணும்பாரு, நீரானநேத்தி
ரங்கள் சிவந்துகாட்டும் நெடிதான மேனியது கறுப்பு
மாகும், தூரான நோயெல்லாங் காடேபோகும் துப்புற 137
வாய் முப்பூவின் மகிமைதானே.

தானுன முப்பூவின் மகிமையாலே சட்டமுடன் சரக்
கெல்லாங் கட்டும்பாரு, பானுன சூதமது துள்ளியோடும்
பாங்கான கெந்தியது நீறிப்போகும், தேனுன லிங்கமது
செந்தூரிக்கும் தேற்றமுடன் பூரமதைப் பொருமிக்கொல்
லும், கோனுன வீரமது பற்பமாகும் கொடிதான பாஷா 138
ணம் சாகும்பாரே.

பாரேதான் நவதாது முப்பத்திரெண்டும் படுமுன்னே
சரக்கெல்லா மடிந்துகொல்லும், நேரேதான் லவணவகை
யிருபத்தைந்தும் நேரான கற்பவகைமுன்னூற்றுச் சொச்
சம், கூரேதா[illegible] சொன்னபடி சூட்சமுப்பு குன்றியிடை
பட்டக்கா லெல்லாமாளும், வீரேதான் சரக்குக்கு நெடுங் 139
காலனுகும் மிக்கான துருசுக்கு குருவுமாமே.

குருவான கண்டரது குருவுமானுல் குவலயத்தில்
கோடிவித்தை யாடலாகும், திரிவானவாமியவள் முன்னே
நிற்பாள் திக்கெல்லா மெச்சுதற்கு சித்தனுவாய், மருவான
நாதாக்கள் ரிஷிகள்தாமும் மதிப்புடனே யுந்தனுக்குவரமு
மீவார், கருவான வுளவறிந்த சித்தனுவாய் காசினியிலுன் 140
னைப்போல் சித்தனுண்டோ.

உண்டேதான் வையகத்தில் சித்தனுண்டோ
ஓகோகோ யுந்தனையும் ரிஷிதானென்பார், திண்டான
தேவமுனி யுன்னையென்பார் திறமையுள்ள நாதாக்கள்
குருவேயென்பார், சண்டாளமானதொரு கருமிமாண்பர்
சட்டமுடன் பொய்நாதனென்பார் கண்டீர், கண்டாலும்
விடுவாரோ சித்தரூபம் காசினியில் சபித்திடுவா ருண்மை 141
பாரே.

**சித்தர்கள் முப்பூவைக் கேட்குதல்**

பார்க்கவென்ருல் நாதாக்கள் சித்துரூபம் பட்சமுடன்
வுந்தனுடனருகில்வந்து, தீர்க்கமுடன் வருந்தியல்லோ

முப்புகேட்பார் திகழுடனே குருவெனக்கு வேண்டுமென் றார், கார்க்கவென்று மஞ்சாடி குருகேட்டாலும் கர்த்தனே யுந்தனிட கடாட்சமென்று, மூர்க்கமது வாராமல் முன்னே நின்று முடிவணங்கி யடிபணிந்து மொழிசொல்வீரே.

மொழியான வார்த்தைக்கு முன்னேநின்று மோசமது வாராமல் முடிவுசொல்லி, வழியான துரையோடு மார்க்கஞ் சொல்லி வகையுடனே யவர்தமக்குத் தொண்டுசெய்து, பழியான வார்த்தைக்கு யிடங்கொடாமல் பட்சமுடனவர் மீதில் கிருபைவைத்து, சுழியான வாசிமுனை தன்னை நோக்கி சூட்சாதி சூட்சமதைக் கேட்டிடீரே. 143

கேட்டளவி லுன்மீதில் கிருபைவைத்து கேழ்விக்குத் தார விடையுஞ்சொல்லி, நாட்டமுடன் பரிபோகமிகவுஞ் செய்து நயமுடனே சரசமுறை தாமுறைத்து, தேட்ட முடன் மனதிறங்கச் செய்துகொண்டு தெளிவான குரு வதனை யடைந்துகொள்ள, வாட்டமுடன் லகுவுடனே பின்னுங்கேட்பார் வகைமோசம்போகாதே மன்னுகேளே.

## சித்தர்கள் மகிழ லேகியம்

கேட்கவேயவர்தமக்கு களிப்புகொள்ள கெவனமுடன் குளிகையென்ற லேகியங்கேள், சூட்சமுடன் மாணுக்கள் பிழைக்கவென்று தொல்லுலகி லடியேனுங் கருணை கூர்ந்து, நீட்டமுடன் கோரக்கர் மூலிதன்னை நேர்மை யுடன் தானெடுப்பாய் சேர்தான்ரெண்டு, வாட்கமலவட்ட மென்ற பாண்டந்தன்னில் வகையுடனே காலாங்கிசொற் படிக்கே. 145

சொல்லான சொல்லுக்கு குறைநேராமல் தோற்றமுட னுவின்பால் படிதான்கொண்டு, புல்லான சீலைதனை வேடு கட்டி புகழான கெஞ்சாவை மேலேவைத்து, கல்லான பாண்டமதை மேலேமூடி கடியான வாலுகையா மேலே வைத்து, மெல்லவே தீயெறிப்பாய் சாமம்ரெண்டு விருப்ப முடன் சுண்டமட்டும் யெரித்திடாயே. 146

எரிக்கவே யிப்படியே பத்துமுறைதானும் யெழிலான கெஞ்சாவை சுத்திசெய்து, வெரிக்கவசம் போவதற்கு யின்னுஞ்சுத்தி வேகமுடன் சொல்லுகிறேன் மைந்தா கேளு, பொரிக்கவசம் நிம்பழத்தின் சாற்றினாலே பொருந் தவே பத்துமுறை முன்போற்றீட்சை, சரியுமே செய்யுகை கையில் கெஞ்சாசுத்தி சட்டமுடன் காலாங்கி யுரைத்த தாமே. 147

தாமான கெஞ்சாவை யெடுத்துக்கொண்டு சட்ட முடன் ரவிதனிலே காயப்போடு, காமான கல்லுரலில் போட்டுமைந்தா கருவாகத் தூளிடித்துப் பொடியாய்ச்



செய்து, வேமான மானதொரு வபினிதன்னை வேகமது போவதற்குப் பின்னுங்கேளு, சாமான மாகவேதான் யௌநீர்தன்னால் சட்டமுடன் தீட்சையது பத்துசெய்யே.

செய்யவே யபினுக்கு தீட்சையப்பா செய்புகிறேன் வருண்மைந்தா யின்னம்பாரு, துய்யவே பசும்பாலாம் பசு மோராகும் துப்பரவாய் சுத்தியது நன்றாய்ச்செய்து, செய் யவே பத்துமுறை திட்சைதானும் பேரான வபினிக்குச் செய்யவேண்டும், உய்யவே தீட்சையது யானபின்பு உத்தமனே கடைசரக்கு செப்பக்கேளே. 149

கேளேதான்சுக்குடனே வால்மிளகுதானும் கெடி யான கெசகெசாமராட்டி மொக்கு, வேளேதான் லவங்க முடன் லவங்கப்பட்டை வேகமுடன் ஜாதிக்காய் சாதிப் பத்திரி, கோளேதான் நேராமல் ஜஜிராவும் குணமான ரூமஸ்திபாஜிபந்து, பாளேதான் யோகாமல் பேதாணவும் பாங்குபெற லவங்கமென்ற பட்டைதானே. 150

தானான பட்டையுடன் யிம்பூராவும் தாக்கான மாசிக் காய் தான்றிக்காயும், மானானகடுக்காயும் மரகப்பூவும் மாசற்றயேலமுடன் நெல்லிக் காயும், கோனான குமட்டி விரையினோடு கொடிதான வூமத்தின் விரைந்தாயுனும், பானான கெஞ்சாவின் விரையுந்தானும் பளிங்கான கொடி வேலி மூலியாமே. 151

ஆமேதான் மூலியொடு சூரைவித்து அப்பனே வேலி யென்ற பருத்திதானும், தாமேதான் வலம்புரியு விடம் புரியுமாகும் தாக்கானவவமுக்கராவின் தோல் தானும், வேமேதான் தாதுமாதுளையின் வெறும் மிக்கான வாத்த லரிசுருளிதானும், நாமேதான் சொன்னபடி யிருவேலி கூட்டி நயம்பெறவே சூரணமாய்ச்செய்து கொள்ளே.

கொள்ளவே கற்கவகை யின்னஞ்சொல்வேன் சொல் வேன் கோளாறு நேராமல் குருபதத்தால், விள்ளவேதக் கோலம் பரங்கிப்பட்டை விருப்பமுடன் வாலுளுவை திப்புலியுமாகும், மெள்ளவே யிருசீரங் காட்டுச்சீரம் மேலான வாய்விளங்கம் ஓமந்தானும், அள்ளவே ரோஜ ஊயும் பூலாவாகும் அப்பனே பூமி சக்கரையுமாமே. 153

சர்க்கரைஞ் சீந்திலொடு சதாவேலிதானும் தாக்கான பெருவாகை சிறுவாகையாகும், ஒக்கவே தண்ணீரின்மிட் டானுகும் உற்பனமாம் தம்பூதப்பூச்சிதானும், சிக்கவே பாதிரிமுல்லை தானும் சீராவாஞ் செங்கழு நீர்ப்பூண்டு மாகும், தாக்கவே சிவகரந்தை விஷ்னு கரந்தை சட்ட முடன் சட்டாணைச்கூடச்சேரே. 154

சேரவே வசுவாசி மிளகுதாளும் சிறப்பான வேரமு டன் ரேவல் சின்னி, தீறவே, விச்சியுடனுலம்வித்து திற